ice Rs. 20.00
விலை ரூ: 20.00

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

ISSN 1391-9504

Vijey විජය

# விஜய்

31.12.2008 - மலர் 05, இதழ் 43

## இனிதே பிறக்கட்டும் 2009

## புதுவருட வாழ்த்துக்கள்

## உலகே சிறக்கட்டும் நன்றே



## சீன நாகரிகத்தின் வரலாறு

## காட்டு மிருகங்களிடம் தப்பும் வழிமுறை

விலை ரூபா 12/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை வந்தால் குடை நினைவுக்கு வரும்



குடை உருவாகி எவ்வளவு காலம் இருக்குமென்று நினைக்கிறீர்கள்? சுமார் நான்காயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. எகிப்திய, கிரேக்கத்திய, சீன புராதன கலைகளில் குடை பற்றிய ஆதாரங்கள் காணக்கிடைக்கின்றன.

புராதன காலத்தில் குடைகள் சூரிய ஒளியிலிருந்து நிழல் பெறுவதற்காகவே வடிவமைக்கப்பட்டன. மழை நீரிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக குடைகளை முதன்முதலாக உபயோகித்தவர்கள் சீனர்களே. காகிதத்தால் செய்யப்பட்ட குடைகளுக்கு மெழுகு பூசி அவற்றை அவர்கள் மழைக்கு உபயோகித்தனர். Umbrella என்னும் சொல் இலத்தீன் சொல்லான Umbra என்னும் சொல்லில் இருந்தே உருவாகியுள்ளது. இதன் அர்த்தம் நிழல் என்பதாகும்.

பதினாறாம் நூற்றாண்டிலேயே மேற்குலக நாடுகளுக்கு குடை அறிமுகமாகியது. ஆரம்பத்தில் குடை பெண்கள் பாவிப்பதற்கே பொருத்தமானதென்று கருதப்பட்டது. பின்னர் பெர்ஷிய பயணியும் எழுத்தாளருமான ஜொனாஸ் ஹன்வே (1712-86) இங்கிலாந்தில் பொது இடங்களில் 30 வருடகாலமாக குடையொன்றை உபயோகித்தார். இவரே குடை உபயோகத்தை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தியவராவார்.

முதலாவது குடை விற்பனைக் கடை 'ஜேம்ஸ் ஸ்மித் அன்ட் சன்ஸ்' என்று அழைக்கப்பட்டது. 1830 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த விற்பனை நிலையம் லண்டன் 'நியூ ஒக்ஸ்போர்ட்' வீதியில் இன்று வரை இருக்கின்றது.

ஐரோப்பாவில் ஆரம்ப காலத்தில் உருவாக்கப்பட்ட குடைகள் மரத்தினால் அல்லது திமிங்கில எலும்பால் செய்யப்பட்டு ஆட்டு ரோமத்தாலும் எண்ணெய் பூசப்பட்ட ஒருவகைத் துணியினாலும் அமைக்கப்பட்டிருந்தன.



குடைகளுக்கான வளைவுக் கைப்பிடிகளை தொழில் நிபுணர்கள் 'கருங்காலி' போன்ற கனத்த மரங்களால் வடிவமைத்தனர். இவர்களுக்கு இவர்களின் பங்களிப்புக்காக சிறந்த ஊதியம் வழங்கப்பட்டது.

1852 ஆம் ஆண்டில் சாமுவேல் ஃபொக்ஸ் என்பவர் உருக்குக் கம்பிகளுடனான குடையை வடிவமைத்தார். அதன் பின்னர் நவீன மடிக்கக்கூடிய குடை தயாரிக்கப்பட்டது.

-சீலன்


## விஜய் சந்தா விபரம்

'விஜய் பத்திரிகைக்கு சந்தா செலுத்தி தபால் மூலமும், நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி விநியோகம் (கொழும்பிற்குள்) | ரூ.624/= | ரூ.312/= |
| தபால் மூலம் | ரூ.1404/= | ரூ.702/= |

பின்வரும் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்புங்கள்
*(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)*

பெயர்: ..........
முகவரி: ..........
தொ.பே.இல: ..........
எமக்கு .............. மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்.

.......................... ..........................
கையொப்பம் திகதி

உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ (Money Order), காசோலையாகவோ (Cheque) அனுப்பலாம். காசுக்கட்டளையை மாற்றும் தபால் கந்தோர் SLAVE ISLAND POST OFFICE எனக் குறிப்பிடவும். காசோலை (Cheque) அனுப்புவோர் Wijeya News Papers Ltd என்ற பெயருக்கு எழுதவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**SUBSCRIPTION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**

மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல - 0112479653


# வாசிப்பின் முக்கியத்துவம்



வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்துகிறது என்பது நாம் அறிந்த விடயம். இது புதுவருட காலப்பகுதி. இக்காலப்பகுதியில் புத்தாடைகள் வாங்குவதற்கும் பரிசுப் பொருட்கள் வாங்குவதற்கும் இன்னும் புதுப்புது வகையான பொருட்கள் வாங்குவதற்கும் நாம் கடை வீதிகளுக்குச் செல்வதுண்டு. இவ்வாறு செல்கையில் புத்தகங்கள் வாங்குவதையும் நாம் ஒரு முக்கிய கடமையாக கொள்ள வேண்டும்.

நாம் எல்லோருமே ஏதோ ஒன்றைப் பற்றி அல்லது பலதைப் பற்றி அறிவதற்கு ஆர்வமுள்ளவர்களாகவே இருக்கிறோம். நாம் எவ்வெவற்றை அறிய விரும்புகிறோம் என்பதைப் பட்டியல் போட்டுக் கொள்ளவேண்டும். அவை சம்பந்தமான புத்தகங்களைத் தேடிப்பெற வேண்டும்.

உதாரணமாக எகிப்திலுள்ள பிரமிட்டுகள் பற்றியும் அவை எவ்வாறு கட்டப்பட்டன என்பது பற்றியும் அறிய விரும்பினால் அது தொடர்பான புத்தகம் ஒன்றை வாங்கவேண்டும். அதனை வாங்கி வாசிப்பதன்மூலம் நாம் அறிய விரும்பிய பிரமிட்டுகள் பற்றிய தகவல்களை இலகுவாக அறிந்து கொள்ளலாம்.



எந்த ஒரு விடயத்தையும் இலகுவாக அறிந்து கொள்வதற்கு வாசிப்பதே சிறந்த வழியாகும். நூலக வசதி, பழைய புத்தகக்கடை அல்லது வீட்டில் இன்டர்நெட் வசதி இருக்குமெனில் வாசிப்பு ஒரு செலவுமிக்க விடயமாக இருக்காது. வாசிப்புக் கடலில் மூழ்குவோமெனில் நாம் சிறந்த அறிவைப் பெற்றுத் திகழலாம்.

புத்தகங்களை இலகுவாகப் பெறுவதற்கு பல வழிகள் உள்ளன. நூலகங்களில் புத்தகங்களைக் கடனாக வாங்கும் நடைமுறையை ஏற்படுத்திக் கொள்ளலாம். நண்பர்களுடன், பழைய புத்தகக்கடைகளுடன் புத்தகங்களை பரிமாறிக் கொள்ளும் நடைமுறையை ஏற்படுத்திக் கொள்ளலாம். இத்தகைய நடைமுறைகளால் பொழுதுபோக்கை குறைந்த செலவில் பயனுள்ளதாக்கிக் கொள்ளும் நிலை உருவாகும்.

வாசிப்பில் கட்டுப்பாடுகள் கிடையாது. 'கண்டது கற்க பண்டிதனாவான்' என்பது போல் நாம் வாசிப்பவை நல்நூல்களாக, சஞ்சிகைகளாக, செய்தித்தாள்களாகவும் இருக்கலாம். வாசிப்பினால் அறிவு வளர்வது மட்டுமன்றி வாசிப்புத்திறன், உச்சரிப்பு எழுத்துக்கூட்டல் போன்ற அறிவும் வளர்கிறது. அதுமட்டுமல்லாமல் நமது அன்றாட உரையாடல்களில் அவசியம் ஏற்படுகையில் நாம் கற்றவற்றை மேற்கோள் காட்டிப் பேசும்போது நமது பேச்சு மதிக்கப்படுகிறது.



இந்த அவசர உலகில் நாம் வாசிப்புப் பழக்கத்தைக் கைவிடக்கூடாது. வாசிப்பு என்னும் பொழுதுபோக்கானது நமது கல்விக்குக் கிடைக்கும் ஒரு மேலதிக அறிவாகும். அதனால், தினமும் வாசிப்பதற்கென நேரம் ஒதுக்கிக் கொள்ளவேண்டும். தினசரி வாழ்க்கையின் ஒரு கடமையாக வாசிப்பையும் ஏற்படுத்திக் கொண்டால் அதன் பலனை நாம் அனுபவிக்கலாம்.

-ராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்கால ராட்சதங்கள் மீண்டும் வருமா?

'ஜுராசிக் பார்க்' மற்றும் 'லொஸ்ட் வேர்ல்ட்' திரைப்படங்களூடாகக் காணக்கிடைத்த உலகை உலுக்கிய ராட்சத டைனோசர் விலங்கினத்தை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். வரலாற்று ஆய்வுகளின்படி அக்காலத்தில் வாழ்ந்த மற்றுமொரு ராட்சத விலங்கினம்தான் 'வூலி மெமத்' (Woolly mammoth) எனப்பட்ட அடர்ந்த ரோமங்களையுடைய யானையை ஒத்த ராட்சத விலங்கினம். இந்த விலங்கினங்களை நிஜத்தில் உயிருடன் கொண்டு வர திரைப்பட இயக்குநர்களால் முடியவில்லை. எனினும், இனிவரும் 10, 20 ஆண்டுகளுக்குள் மேற்படி சாதனையைப் புரிய விஞ்ஞானிகளுக்கு சாத்தியப்படும் என மரபணு தொடர்பான பரிசோதனையில் ஈடுபட்டுள்ள அமெரிக்க விஞ்ஞானிகள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இந்த மரபணு பரிசோதனையின் வெற்றியை அடுத்து, முற்காலத்தில்



வாழ்ந்த பல ராட்சத விலங்குகளை இவ்வுலகில் மீண்டும் நடமாட வைக்கலாம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். அதன்படி, அவர்களால் முதன்முதலாக உருவாக்கப்படவுள்ள ராட்சத விலங்கினமாக சுமார் 10,000 வருடங்களுக்கு முன்பு இவ்வுலகில் இருந்து அழிந்துவிட்டதாகக் கருதப்பட்ட ராட்சத பாலூட்டி விலங்கினமான வூலி மெமத் திகழ்கின்றது. உடல் முழுவதும் அடர்ந்த மயிர்களால் சூழப்பட்ட, நீண்டு வளைந்த தந்தங்களையுடைய, சுமார் 14 அடி உயரமுடைய விலங்கினமாக இது விளங்குகின்றது. இந்த உயிரினத்தின் உருவாக்கத்துக்காக 3 பில்லியன் உயிரணுக்கள் சேர்ந்த மரபணுத் தொகுதியொன்றை உருவாக்கும் வேலையில் விஞ்ஞானிகள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

இந்த பரிசோதனை நடவடிக்கைகளுக்காக சுமார் பல மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாகவும் இந்த நவீன பரிசோதனையினால் விலங்குகளின் பரிணாமம் மற்றும் அழிவுக்குள்ளாதல் தொடர்பான பல விடயங்களை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





இந்த ராட்சத விலங்கினங்களின் எச்சங்கள் பல்வேறு நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின்போது கிடைக்கப் பெற்றுள்ளன. அதன்படி, 1997 ஆம் ஆண்டில் சைபீரியாவில் 'யாகொஃப்' என்று பெயரிடப்பட்ட 'மெமத்' விலங்கினத்தின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இது சுமார் 6 தொன் எடையுடையது என்றும் 11 அடி உயரமுடையது என்றும் ஆராய்ச்சிகளின் பின்னர் தெரியவந்துள்ளது.

அத்துடன், கடைசி வரை உயிர் வாழ்ந்ததாகக் கருதப்படும் 'மெமத்' கூட்டம் சுமார் 4,000 வருடங்களுக்கு முன் இறந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த விலங்கினம் முதன்முதலில் ஆபிரிக்காவிலேயே வாழ்ந்து வந்துள்ளது. பின்னர் படிப்படியாக அதன் ஆதிக்கம் ஐரோப்பா வரை பரந்துள்ளதாக நம்பப்படுகின்றது.

-ஜீனு

# க.பொ.த (சா/தர) பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி ஆரம்பம்



இம்மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமான க.பொ.த (சா/தர) பரீட்சைகளின் விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் டிசம்பர் 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இந்த விடைத்தாள்கள் திருத்தும் பணிகளில் முதல் கட்டமாக புதிய பாடத்திட்டத்திற்கமைவான விடைத்தாள்களே திருத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், புதிய பாடத் திட்டத்திற்குட்பட்ட கணித பாட வினாத்தாள் தொடர்பாக ஆராயவென நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கைகள் கிடைத்ததையடுத்து, அப்பாடத்திற்குரிய விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கணிதபாட வினாத்தாள் தொடர்பிலான பிரச்சினை காரணமாக இம்முறை க.பொ.த (சா/தர) பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடுவதில் காலதாமதம் ஏற்படலாம் என ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

Vijey விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# பிழைகள் திருத்தப்பட்ட தமிழ்மொழி மூலப் பாடநூல்கள்

2009 ஆம் ஆண்டுக்கான பதிப்பில் பிழைகள் திருத்தியமைக்கப்பட்ட தமிழ்மொழி மூலப் பாடநூல்கள் அச்சிடப்பட்டுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தமிழ்மொழி மூலப் பாடநூல்களின் பண்புசார் தர விருத்தி தொடர்பாக பிரதிக் கல்வி அமைச்சர் மு.சச்சிதானந்தனின் பணிப்புரையின் பேரில், முன்னாள் யாழ்ப்பாணக் கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதியும் தற்போது கல்வி அமைச்சின் நிபுணத்துவ ஆலோசகருமான திருநாவுக்கரசு கமலநாதனினால் தமிழ்மொழி மூலப் பாடநூல்களின் தர மேம்பாடு, விதந்துரைப்பு, திருத்தங்கள் தொடர்பாக இரு செயலமர்வுகள் நடத்தப்பட்டன. இச்செயலமர்வுகளில் கணிதம், விஞ்ஞானம், தமிழ், சைவநெறி, வரலாறு, இஸ்லாம், கடற்றொழில், புவியியல், குடியுரிமைக் கல்வி போன்ற பாடநூல்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டதோடு, அவை தொடர்பாக பல்வேறு சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டன.



மேற்படி சிபாரிசுகள் மற்றும் திருத்தங்கள் தொடர்பில் கருத்தில் கொள்ளப்பட்டு, அவை குறித்த பாட இணைப்பாளர்களால் மீளாய்வு செய்யப்பட்டதற்கிணங்க, 2009 ஆம் ஆண்டிற்கான பதிப்பில் தமிழ்மொழி மூலப் பாட நூல்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளரும் உதவி ஆணையாளரும் இணைந்து பிரதிக் கல்வி அமைச்சருக்கு கடித மூலம் அறிவித்துள்ளனர்.

# விஜய் வழங்கும் அறிவுசார் போட்டி!

**அன்பு வாசகர்களே....**

டிசம்பர் மாதம் முழுவதும் ஒவ்வொரு வாரமும் தலா ஐந்து கேள்விகள் வீதம் பகுதி பகுதியாக நாம் வழங்கிய ஒட்டுமொத்தமான இருபத்தைந்து (25) கேள்விகளுக்கும் உரிய விடைகளை குறிப்பிட்டு முடித்திருப்பீர்கள். அப்படியாயின், விடைகள்அடங்கிய கூப்பன்களை ஒன்றாக இணைத்து தபாலுறையில் இட்டு எமக்குத் தபாலிடுங்கள்.

முகவரி:
'அறிவுசார் போட்டி'
விஜய்,
த.பெ. இல-2034,
கொழும்பு.

விடைகள் வந்து சேரவேண்டிய இறுதி நாள் 20/01/2009

**பரிசுகள் விபரம்**

| | |
|---|---|
| கல்குலேட்டர்கள் | 05 |
| விலையுயர்ந்த பேனாக்கள் | 15 |
| கீடெக்குகள் (Key Tag) | 15 |





இன்னும் பல ஆறுதல் பரிசும் உண்டு

**இந்த வாரத்திற்கான கேள்விகள் பகுதி - 05**

26. தெய்வப் புலவர் என்று கூறப்படுபவர் யார்?
*(திருவள்ளுவர், பாரதியார், பாரதிதாசன்)*

27. உலகின் மிகப் பெரிய பாலைவனம்?
*(கிப்சன், சஹாரா, அரேபியன்)*

28. அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி யார்?
*(ஆபிரஹாம் லிங்கன், ஜோர்ஜ் வொஷிங்டன், ஜோன் எஃப்.கென்னடி)*

29. நீரின் இரசாயன சூத்திரம்
*($H_2O$, $O_2$, $Ca$)*

30. அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெறவுள்ள இடம் எது?
*(பெரிஸ், லண்டன், லொஸ் ஏஞ்சல்ஸ்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் சில அபூர்வ சகோதரர்கள்

உலக வரலாற்றை அவதானிக்கும் பொழுது பல சகோதரர்கள் பல்வேறு வகையான சாதனைகளைப் புரிந்துள்ளனர். ஒரு தாயின் வயிற்றில் பிறந்த சகோதர, சகோதரிகள் வெவ்வேறுபட்ட துறைகளில் பிரகாசித்துள்ளதை அவதானிக்கலாம். உதாரணமாக அண்ணன் மருத்துவத் துறையில் சாதனை படைத்தால் தம்பி அரசியலில் சாதனை படைத்திருப்பார். இப்படியான நிகழ்வுகள் ஏராளம். ஆனால், ஒரே துறையில் சகோதரர்கள் இருவரில் அல்லது சகோதரிகள் இருவரில் குறிப்பிட்ட சிலரே இவ்வாறான சாதனைகளைப் புரிந்துள்ளனர். அவர்கள் கலைஞர்களாக, அரசியல் தலைவர்களாக, மருத்துவர்களாக, விஞ்ஞானிகளாக, பத்திரிகையாளர்களாக, எழுத்தாளர்களாக, கண்டுபிடிப்பாளர்களாக, விளையாட்டு வீராங்கனைகளாக பல்வேறு துறைகளில் பிரகாசித்துள்ளனர்.

அத்தகைய சாதனையாளர்களில் சிலரைப் பற்றி இங்கு பார்ப்போம்.

## மார்க்ஸ் சகோதரர்கள்


மார்க்ஸ் சகோதரர்கள்

ஆரம்பத்தில் நாடகங்களிலும் பிற்காலத்தில் திரைப் படங்களிலும் கொடிகட்டிப் பறந்த ஐக்கிய அமெரிக்காவின் நகைச்சுவை நடிகர்களாகிய இவர்களை உலகம் இலகுவில் மறந்துவிடாது.

**ஆர்தர் மார்க்ஸ் (1888-1964):**
கோமாளி மற்றும் ஹார்ப் வாத்தியக் கலைஞர். 'ஹார்ப்போ' என்று அழைக்கப்பட்டார்.

**ஹேர்பர்ட் (1901-1979):**
ஜெப்போ என்ற நகைச்சுவை நடிகராகத் திகழ்ந்தார்.

**ஜுலியக் (1890-1977):**
நகைச்சுவை ததும்பப் பேசுவதில் திறன் மிக்கவர். குருௗச் சோ என்று உலகெங்கும் பரவலாகப் பேசப் பட்டவர்.

**லியோனார்ட் (1887-1961):**
புகழ் வாய்ந்த 'பியானோ' கலைஞர், திரைப் படத்துறையில் பிரகாசித்தார். சிக்கோ என்று புகழப்பட்டார்.

**மில்ட்டன் (1897-1977):**
கும்மோ எனப் புகழ் பெற்ற நடிகர். மார்க் சகோதரர்களின் தொழில்துறை நிர்வாகியும் இவரே.

## ரைட் சகோதரர்கள்

உலகில் விமானத்தைக் கண்டு பிடித்து அதில் பறந்து சாதனை படைத்த சகோதரர்கள்.


ரைட் சகோதரர்கள்

**ஆர்வில் ரைட் (1871-1946):**
யார் முதலில் பறப்பது என்று காசை சுண்டி விட்டதில் இவருக்கு முதல் வாய்ப்புக் கிடைத்தது. இதன்படி 1903 டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி 'த பிளையர்' என்ற தாங்கள் உருவாக்கிய முதல் விமானத்தில் இவர் முதன்முதலில் பறந்தார்.

**வில்பர் ரைட் (1867-1912):**
அன்றைய தினமே இவர் நான்காவது தடவை பறந்தார். இவரின் பயணம் 59 வினாடிகளே நீடித்தது. முதல் மூன்று தடவை ஆர்வில்தான் பறந்தார்.

## கென்னடி சகோதரர்கள்

ஐக்கிய அமெரிக்காவின் அரசிலும் அரசியலிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர்களில் கென்னடி சகோதரர்கள் மிக முக்கியமானவர்கள். இவர்களில் மூவர் அமெரிக்க அரசியலில் சாதனை புரிந்தனர்.

**ஜோன் எஃப் கென்னடி (1917-1963):**
ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியாக 1961 முதல் 1963 வரை செயல்பட்டவர். 1963 இல் இவர் ஜனாதிபதியாக இருந்தபொழுது சுட்டுக் கொல்லப்பட்டார்.

**ரொபர்ட் எஃப் கென்னடி (1925-1968):**
அமெரிக்க அட்டோர்னி ஜெனரலாகவும், நியூயோர்க் மாகாணத்திலிருந்து அமெரிக்க செனட்டராகவும் தெரிவு செய்யப்பட்டவர். அதிபர் தேர்தலில் போட்டியிட்ட இவரும் 1968 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.


கென்னடி சகோதரர்கள்

**எட்வர்ட் எஃப் கென்னடி (1932):**
அமெரிக்காவின் மஸாசுசெட்ஸ் மாகாணத்திலிருந்து அமெரிக்க செனட்டராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

## மாயோ சகோதரர்கள்

மாயோ சகோதரர்கள் புகழ்பெற்ற அறுவை சிகிச்சை நிபுணர்கள். மின்னசோட்டா மற்றும் ரோச் செஸ்டல் சர்வதேச மாயோ மருத்துவமனையை நிறுவியவர்கள்.

**வில்லியம் மாயோ (1861-1939):**
அடி வயிறு தொடர்பான அறுவை சிகிச்சைகளைச் செய்வதில் வல்லவர்.


வில்லியம் மாயோ


சார்லஸ் மாயோ

**சார்ல்ஸ் மாயோ (1865-1939):**
குரல்வளைச் சுரப்பி மற்றும் கண்களில் 'கட்ரெக்ட்' அறுவைச் சிகிச்சை நிபுணர்.

## அன்லான்டர்ஸ் மற்றும் அபிகெய்ல்வான் சகோதரிகள்

ஒரே பிரசவத்தில் பிறந்த இரட்டைச் சகோதரிகளான இவர்கள் இருவரும் பத்திரிகையாளர்கள்.

**அன்லான்டர்ஸ் (1918):**
'ஆன்லான்டர்ஸ்' என்ற தலைப்பில் எழுதினார். யுனைடெட் பிரஸ் இன்டர்நெஷனல் (United Press International) கருத்துக் கணிப்பில் ஒருமுறை பத்து முக்கிய அமெரிக்கப் பெண்களில் இவரும் இடம் பெற்றிருந்தார்.

**அபிகெய்ல்வான்பரோன் (1918):**
'டியர் அபி' என்ற இவரது பகுதி உலகம் முழுவதும் 800 தினசரிப் பத்திரிகைகளில் இடம்பெற்று வருகின்றது.

## பிரான்டே சகோதரிகள்

ஆங்கில மொழியில் நாவல்களும் கவிதைகளும் எழுதி உலகளவில் புகழ் பெற்றவர்கள் தான் இந்த பிரான்டே என அழைக்கப்படும் மூன்று சகோதரிகளாவர்.

**சார்லோட்டி (1816-1855):**
'ஜேன் ஏர்' என்பது இவரது சிறந்த நாவல்.

**எமலி உத்தரிங்:**
'ஹைட்ஸ்' என்னும் நாவல் மூலம் உலகப் புகழ் பெற்றவர்.

**அன்னி பிரான்டே (1820-1844):**
இவரது முதல் நாவலே மிகச் சிறந்த நாவலாகத் திகழ்ந்தது. இவரின் இளம் வயதில் சிறந்த நாவலாகத் தெரிவான முதல் நாவல் 'அக்னல் கிரே' என்பதாகும்.

## வில்லியம்ஸ் சகோதரிகள்

டேபல் டென்னிஸ்ஸில் சாதனை புரிந்த இரு சகோதரிகள்


-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனில் நடைபெறும் அணுவினையை மூன்று படிகளாகக் கருதலாம்.
படி (1) $^{1}H$ $^{1}H$fl $^{2}H+e^{+}$+ நியூட்ரினோ.
படி (2) $^{2}H$ $^{1}H$fl $^{3}He$+ ஃபோட்டான்.
படி (3) $^{3}He+^{3}He$fl$^{4}He+^{1}H+^{1}H$+ ஃபோட்டான்.

சூரிய அணுச்சேர்க்கையின்போது, ஒவ்வொரு ஒரு கிலோகிராம் நிறையுள்ள ஐதரசன் வினையின்போதும் 0.007 கிலோகிராம் அளவு ஆற்றலாக மாற்றப்படுகிறது. இவ்வாற்றல் சூரியனுள் 4%

# சூரியனில் அணுவினை


மின்னூட்டப்பட்ட துகள்கள் *(Charged Particles)*

இதன்படி, முதல் நிகழ்வில் இரண்டு புரோட்டன்கள் (Proton) ஒன்றோடு ஒன்று மோதி ஒன்று பாடுவதால் ஒருவித ஐதரசன் (H) அணு உருவாக்கப்படுகின்றது. இத்துடன், ஒரு மிகச்சிறிய பொசிட்ரோன் (Positron) களும் நியூட்ரினோ (Neutrino) என்ற ஒரு நிறையற்ற துகளும் வெளியேறுகின்றன. இரண்டாவது நிகழ்வில் இந்த ஐதரசன்


விந்தைக் காட்சிகள் *(Aurara Borealis)*

**சூரியன் இன்னும் 300 கோடி வருடங்களில் குறுகிய விண்மீனைப் போல் மாறிவிடுமாம்**



சுவாலைகள் *(Prominenses)*

மற்றொரு புரோட்டனுடன் மோதி ஒன்றிணைவதால் ஹீலியம்-3($^{3}He$) என்ற அணு உருவாகின்றது.இத்துடன்,ஃபோட்டான் (Photon) ஆனது கதிர்வீச்சாக உமிழப்படுகின்றது.மூன்றாவது நிகழ்வில் இரண்டு ஹீலியம்-3 அணுக்கள் மோதி ஒன்றிணைந்து ஹீலியம்-4 என்ற ($^{4}He$) அணு உருவாகின்றது. இத்துடன், இரு புரோட்டான் மற்றும் ஒரு ஃபோட்டான் (Photon) ஆகியன வெளிப்படுகின்றன.

இத்தகைய நிகழ்வுகளின் போது ஆற்றலானது ஃபோட்டான்களாக வெளியேறுவதோடு மட்டுமன்றி, எடை குறைந்த தனிமமான ஐதரசனிலிருந்து எடை மிகுந்த 'ஹீலியம்' தனிமம் உருவாக்கப்படுகிறது. ஆரம்பத்தில் இருந்த ஐதரசன்களின் மொத்த நிறையை விட நிகழ்வின் இறுதியில் பெறப்பட்ட தனிமங்களின் மொத்த நிறை குறைவாகும். அணுச்சேர்க்கையின் (Fusion) போது ஒரு சிறுபகுதி நிறை (m) ஆற்றலாக (E) மாற்றப்படுகிறது.


சூரியப் புயல் *(Sunstorm)*

$10^{26}$ ஜூல்/விநாடி அளவு உண்டாகின்றது. தனது சமநிலையைப் பராமரிக்க இதே அளவு ஆற்றலை சூரியன் ஒவ்வொரு விநாடியும் கதிர்வீச்சாக வெளியிடுகின்றது. இதன் அளவு 400 டிரில்லியன் வோட்(டு)கள் ஆகும். (ஒரு டிரில்லியன்= $10^{12}$ ஆகும்) ஒவ்வொரு விநாடியின் போதும் சூரியனானது 4 மில்லியன் தொன்கள் ஐதரசனை செயல்திறனுள்ளதாக மாற்றி அண்ட வெளியில் கதிர்வீச்சாக வெளியிடுகின்றது. இவ்வாறு சூரியன் தனது ஆற்றலை அல்லது சக்தியை இழந்து கொண்டே வருவதால் அதன் நிறை குறைந்து வருகிறது. இதுவரை சூரியனின் வயது 500 கோடி ஆண்டுகள் எனக் கணக்கிட்டுள்ளனர். சூரியன் மேலும் சுமார் 700 கோடி ஆண்டுகள் வாழ்வதற்கான ஆற்றலைப் பெற்றுள்ளதாகவும் அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர்.


சூரியன்

## ஆச்சரியமான எதிர்வுகூறல்கள்

ஆனால் சூரியனது ஆற்றல் வெளியாகி நிறை குறைந்து கொண்டே வருவதால் சூரியனின் உட்பகுதியில் உட்குழிவு ஏற்பட்டு மேற்பரப்பில் சுருக்கம் ஏற்படுகின்றது. அதனால், உள்பகுதியை நோக்கி மேற்பரப்பு நெருக்கப்படுகின்றது. இதனால், சூரியனின் வெப்பம் அதிகரிக்கின்றது. இவ்வாறாக இன்னும் 100 கோடி ஆண்டுகளில் சூரியனின் வெப்பம் 50,000 பாகை (பரன்ஹைட்)அளவை எட்டும். அப்பொழுது சூரியனில் இருந்து வெளிர்நீல நிறமுள்ள கதிர்கள் வெளியாகும். அடுத்து 300 கோடி வருடங்களில் சூரியன் அதன் நடுத்தர வயதை எட்டிப்பிடிக்கும். இந்நிலையில் சூரியனில் ஐதரசன் மற்றும் ஹீலியம் அணுக்கள் முற்றுமுழுதாக முடிவடைந்த நிலையில் அது விரிவடையத் தொடங்கும்.

இவ்வாறு விரிவடையும்போது சூரியனுள் புதன், வெள்ளி, புவி ஆகிய கோள்கள் அடங்கிவிடும். இந்நிலையில் சூரியன் சிவப்பு நிற இராட்சதன் போல் (Red giant) காணப்படும். உட்புற நெருக்கம் காரணமாகச் சூரியனில் அழுத்தம் அதிகரிக்கும். இந்நிலையில் சிவப்பு நிறம் வெள்ளையாகிக் காணப்படும். அடுத்து வரும் 50 கோடி வருடங்களில் சூரியனிலுள்ள எரிபொருள் முழுக்கத் தீர்ந்துபோன நிலையில் வெண்ணிற குறுகிய விண்மீன் போலச் சூரியன் மாறிவிடும். அதனை அடுத்து இன்னும் 30 லட்சம் வருடங்களில் ஆற்றல் முழுவதையும் இழந்த சூரியன் கறுப்பு நிறமாக மாறிவிடும். இந்நிலையில் சிவப்பு இராட்சதனாக இருந்த பொழுது விழுங்காமல்


சூரியக் கரும்புள்ளி *(Sun black spot)*

விட்ட சில துணைக்கோள்களுடன் கறுப்புக்குள்ளனாகக் (Black Dwarf) காணப்படும்.

(இன்னும் சில தகவல்கள் அடுத்த இதழில்...)

**-இரஞ்சித்ஜெயகர்**

60 நாட்களில் தபால் மூல ஆங்கில பாடநெறி
இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி English Language யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC/SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்த தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.

60 நாட்களின் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்றும்
FREE FREE இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
* இலவச 30 days Easy Way English Book Part1


இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பு எதிர்பார்க்கும், இல்லத்தரசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.
மேலதிக விபரங்களுக்கு 10/- பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-5615561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்றிலிருந்து பாட
# எதிர்கொள்ள உதவும் '

**இயற்கை அனர்த்தங்கள் குறித்து உலகளாவிய ரீதியில் அவதானம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். நாளாந்தம் இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றமையே இந்த அவதான நிலைக்கு முக்கிய காரணமாகும். இலங்கையர்களாகிய நாமும் அவ்வாறான ஆபத்து நிலையில்தான் இருக்கின்றோம். இந்த அனுபவங்களின் அடிப்படையில் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை எடுப்பதற்கான காலம் ஏற்பட்டுள்ளது.**

***"அப்பா, இந்த டிசம்பர் 26 அன்று தேசிய பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது அல்லவா?"***

***"ஆம் மகனே! உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா 2004 டிசம்பர் 26 இல் 'சுனாமி' ஏற்பட்டது?***

***"ஆமாம். நிறையப் பேர் அதனால் இறந்தார்கள். பலர் இடம்பெயர்ந்தனர்"***

***"அன்றைய தினத்தில் துக்கம் அனுஷ்டிப்பதனால் மட்டும் பலன் இல்லை. அந்த அனுபவத்தைப் பாடமாகக் கொண்டு அனர்த்தங்களில் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டும். தேசிய பாதுகாப்பு தினத்தின் நோக்கமும் அதுவே"***

பாதுகாப்பான இலங்கையை கட்டியெழுப்பும் நோக்கத்துடன் டிசம்பர் 26 ஆம் திகதியை நாம் தேசிய பாதுகாப்பு தினமாக அனுஷ்டித்தோம். 'அனர்த்தங்களைக் குறைப்பதன் ஊடாக மனித உரிமைகளைப் பாதுகாப்போம்' என்பதே இம்முறை தேசிய பாதுகாப்பு தினத்தின் கருப்பொருளாகும். 'சுனாமி' அனர்த்தத்தின் பின்னரே நாம் இயற்கை அனர்த்தங்கள் குறித்து அதிக அக்கறை காட்ட ஆரம்பித்துள்ளோம்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் 2004 டிசம்பர் 26 ஆம் திகதி அன்று 'சுனாமி' யின் சீற்றத்தினால் முழு நாடுமே பாதிப்பை எதிர்நோக்கியது. 40 ஆயிரம் பேர் இதனால், உயிரிழந்தனர். பல மில்லியன் கணக்கான சொத்துக்கள் சுனாமிப் பேரலைகளினால் காவு கொள்ளப்பட்டன.

இந்தத் துக்ககரமான விடயத்தை வருடா வருடம் நாம் அனுஷ்டித்து வருகிறோம். இவ்வாறான இயற்கைப் பாதிப்புகளிலிருந்து ஏற்படும் அனர்த்தங்களைக் குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுங்கள் என்பதே எம்மை விட்டுப் பிரிந்தவர்கள் எமக்கு விட்டுச் சென்றுள்ள செய்தியாகும். அதன்படி, பார்த்தால் டிசம்பர் 26 என்பது துக்க தினம் அல்ல. மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் தினமாகவே அந்த தினம் அமைய வேண்டும். என்பதற்கிணங்க டிசம்பர் 26 ஆம் திகதியை தேசிய பாதுகாப்பு தினமாகக் குறித்திருப்பது பொருத்தமானதாகும்.

## பாதுகாப்பான இலங்கையை நோக்கி

நாம் இதுவரை சந்தித்த இயற்கை அனர்த்தங்களில் சுனாமி அனர்த்தமே பேரழிவாக அமைந்தது. எனினும், அடிக்கடி நிகழும் இயற்கையின் பாதிப்புகளினால் நாம் அனர்த்தங்களை எதிர்கொள்கின்றோம். வெள்ளப்பெருக்கு, சூறாவளி, மண்சரிவு, வறட்சி, கடலரிப்பு, மின்னல் தாக்குதல் என்பன இவற்றில் சிலவாகும். மனிதனின் தவறான செயற்பாடுகளினால்தான் இவ்வாறான தீவிர பேரழிவு நிலைகள் ஏற்படுகின்றன.

முறையற்ற வகையில் இடங்களைக் கையாளுகின்றமை, அக்கறையின்மை, அறியாமை அனர்த்த முகாமைத்துவத்திற்கு ஏற்ப செயற்படாமை காரணமாகவும் இயற்கைப் பாதிப்புகளின் தீவிர பாதிப்பு நிலைகளை நாம் எதிர்நோக்குகின்றோம். அனர்த்தத்தினை எதிர்கொண்ட பின்னர் செயற்படுவதே எமது சமூகத்தின் வழமையான நடைமுறையாகவும் இருக்கிறது.

அனர்த்தம் தொடர்பான பல அனுபவங்கள் எமக்கு உண்டு. அதன் ஊடாக அனுபவப் பாடத்தினைக் கற்று அனர்த்தங்களைத் தடுத்துக் கொள்ளமுடியும். தடுக்க முடியாத இயற்கை அனர்த்தம் எனின் அதிலிருந்து விலகியிருக்க முடியும். அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து மீளும் வகையிலான நிர்மாணப் பணிகளையும் மேற்கொள்ள முடியும்.

அதனால், அனர்த்த முகாமைத்துவம் குறித்து மக்களை அறிவுறுத்துவது மற்றும் அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் பாதுகாப்பான இலங்கையைக் கட்டியெழுப்புவதே தேசிய பாதுகாப்பு தினத்தின் பிரதான நோக்கமாகும்.

## அனர்த்தங்கள் ஏன் அதிகம்?

மனிதர்களினால் சேதப்படுத்தப்பட்ட கடற்கரைப் பகுதிகளையே 'சுனாமி' அதிகம் தாக்கியது. எனினும், இயற்கையாக விளைந்த கடல் தாவரங்கள் மற்றும் பவளப்பாறைகள் கொண்ட கடற்பகுதிகள் சுனாமியின் பாதிப்புக்கு உள்ளாகவில்லை. ஆறுகள் பெருக்கெடுத்ததன் காரணமாக அண்மையில் வெள்ளப்பெருக்குகள் நிகழ்ந்தன. மழைநீர் வடிந்தோடும் வழிகள் அடைபட்டமை, சதுப்பு நிலங்கள் நிரப்பப்பட்டமை என்பனவே இவ்வகையான வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான முக்கிய காரணமாக அமைந்தன.

மலையகப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள மண்சரிவுகளுக்கும் மனிதர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளே காரணமாகும். 2002 ஆம் ஆண்டு இரத்தினபுரியில் நிகழ்ந்த வெள்ள அனர்த்தத்தினால் உயிர் உடைமைகளுக்கான சேதம் பெருவாரியாக ஏற்பட்டது. இடி மின்னல் தாக்குதலினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்து வருகின்றது. 1996 இல் நிகழ்ந்த மண்சரிவு சம்பவத்தின் போது 300 இற்கு அதிகமானோர் கொல்லப்பட்டதுடன், மண்சரிவு காரணமாக வருடாந்தம் இடம்பெயரும் மக்கள் தொகையும் அதிகரித்து வருகின்றது.

நாளாந்தம் அனர்த்தங்களை எதிர்கொள்வதை விடுத்து அந்த அனர்த்தங்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான வழிமுறைகள் பல உள்ளன. தேசிய பாதுகாப்பு தினத்தில் அது பற்றியே நாம் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

## அனர்த்தம் குறித்து விழிப்புணர்வு கொள்வோம்

நாம் சந்திக்க நேரும் பாதிப்புகள் குறித்தும் அதிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழிமுறைகள் குறித்தும் அக்கறை காட்டவேண்டும். ஊடகங்களின் மூலம் அந்த விழிப்புணர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும். அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் ஊடாகவும், பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகள் ஊடாகவும் மக்களை



சுனாமி



விசேட அனுசரணை:
PRACTICAL ACTION
Intermediate Technology Development Group
ப்றக்டிக்கல் எக்சன்
இல. 5, லயனல் எதிரிசிங்க மாவத்தை கொழும்பு-5.
தொலைபேசி: 011 2829412 பெக்ஸ்: 011 2856188
மின்னஞ்சல்: Sri Lanka@practicalaction.org.lk
இணையதளம்: www.janathakshan.net
www.practicalaction.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ம் கற்று எதிர்காலத்தை 'தேசிய பாதுகாப்பு தினம்'

National Safety Day
December 26

தேசிய பாதுகாப்பு தினத்தின் இலச்சினை

அறிவுறுத்துவது அவசியமாகும். நாம் வாழும் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் வாழப் பழகிக் கொள்வதன் மூலமும் சூழலோடு இணைந்து வாழ்வதன் மூலமும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

## அனர்த்தத்தினை தவிர்ப்பதற்கு

அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்னர் அனர்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளவும், அனர்த்தத்தின் போது உரிய வழிமுறைகளைப் பின்பற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அனர்த்தத்தினை எதிர்கொள்ளும் போதும் அதற்குப் பின்னர் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்காக அனர்த்தம் நிலவக்கூடிய பிரதேசங்களில் சரியான நிர்வாகக் கட்டமைப்புகளின் கீழான அனர்த்த முகாமைத்துவத்தினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அனர்த்த முகாமைத்துவம் என்பது நிரந்தரமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய விடயமாகும். வெள்ளப்பெருக்கோ, மண்சரிவோ ஏற்பட்டவுடன் மட்டும் அனர்த்த முகாமைத்துவத்தினை மேற்கொள்ள முடியாது. மக்களை அறிவுறுத்துவது, எச்சரிக்கை வலையமைப்புகளை இயங்கச் செய்தல், ஆபத்துக்கொண்ட பிரதேசமாயின் அவற்றினை இனம் காணல், பாதுகாப்பான இடங்களை ஏற்பாடு செய்தல் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இது தனிநபரினாலோ, தனிப்பட்ட ஒரு நிறுவனத்தினாலோ சிலகூட்டு நிறுவனங்களினாலோ மேற்கொள்ளக்கூடிய விடயமல்ல. இது சமூகப் பொறுப்பாகும். அதனால், முழு சமூகத்தினதும் பங்களிப்பு இவ்விடயத்தில் அவசியமாகும்.

**இயற்கை அனர்த்தம் ஒன்றினை சந்தித்த போது நீங்களோ அல்லது உங்களைச் சேர்ந்த நபரோ முன்னெடுத்த நடவடிக்கைகள் குறித்து மிகச் சுருக்கமாக 50-100 சொற்களில் எமக்கு எழுதி அனுப்புங்கள். சிறந்த ஆக்கத்தை எழுதி அனுப்புவோருக்கு பெறுமதியான புத்தகப் பொதி ஒன்று பரிசாக வழங்கப்படும். அனுப்ப வேண்டிய முகவரி :**

**அனர்த்தங்களைத் தவிர்ப்போம்
ப்றக்டிக்கல் எக்ஷன், இல 5,
லயனல் எதிரிசிங்க மாவத்தை,
கொழும்பு-05.**



அனர்த்தத்திற்கு உள்ளானவர்களைக் காப்பாற்றுதல்

## அனர்த்தங்களற்ற எதிர்காலத்திற்கு

✱ தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கீழ் அவசரகாலத்தின்போது நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொள்ளல்.

✱ அனர்த்த முகாமைத்துவ நிலையம், சுனாமி முன்னெச்சரிக்கை நிலையம், அனைத்து வித அனர்த்த முன்னறிவுப்பு நிலையம், அனர்த்தம் பற்றிய தேசிய தரவுகளைச் சேகரிக்கும் ஆய்வு செய்யும் நிலையம், தேசிய நடவடிக்கை நிலையம் ஆகிய நிலையங்கள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ் இயங்கி 24 மணி நேரமும் செயற்பட வேண்டும்.

✱ இந்த நிலையங்கள் அனைத்தையும் மாவட்ட செயலாளர் அலுவலகம், பிரதேச சபை மற்றும் கிராமியக் குழுக்கள் ஆகியவற்றுடன் இணைத்தல்.

✱ கிராமிய மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவம் குறித்து செயற்படும் குழுக்களை உருவாக்குதல். அனர்த்தத்தின்போது அவர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்.

✱ அரச, தனியார் நிறுவனங்கள், நிர்வாக மையங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு நிலையினைக் கட்டியெழுப்பி அனர்த்த முகாமைத்துவப் பணிகளில் ஈடுபடல்.

✱ பொதுமக்கள் மற்றும் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள், அரச மற்றும் தனியார் நிறுவன ஊழியர்கள் மத்தியில் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.

✱ ஆபத்து நேரங்களின் போது செயற்படுவதற்காக கிராமிய மட்டத்தில் தொழில்நுட்பக் குழுக்களை அமைத்தல்.

## இன்று எங்கே நாம்?

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட 'சுனாமி' அனர்த்தத்தின் பின்னர் அனர்த்த முகாமைத்துவம் பற்றி மக்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். எனினும், பாரிய அனர்த்தத்தை எதிர்கொண்ட பின்னர் ஒரே தடவையில் எழுச்சி பெறல் என்பது கடினமாகும். அதனால், அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளில் சில குறைபாடுகளைக் காணக் கூடியதாகவுள்ளது. எனினும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்ற அடிப்படையில் அனர்த்த முகாமைத்துவம் பற்றி அதிக அக்கறை காட்டி வருகின்றது.

'ஹியாகோ' உடன்பாட்டிற்கு இணக்கம் தெரிவித்தல், அனர்த்த முகாமைத்துவம் சட்ட மூலத்தை நிறைவேற்றுதல், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினை அமைத்தல், அனர்த்த முகாமைத்துவ வரைபடத்தினைத் தயாரித்தல், அனர்த்த முகாமைத்துவ அமைச்சினை அமைத்தல் என்பன இவற்றுக்கு உதாரணமாகும்.

இந்த நிறுவனங்கள் ஊடாக தற்போது அனர்த்தங்கள் பற்றிய தரவுகளை சேகரித்தல், அறிவுறுத்துதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அனர்த்தங்கள் அற்ற நாடாக இலங்கை மாற அர்ப்பணிப்புடன் கூடிய சிந்தை நம் மத்தியில் ஏற்படுதல் அவசியமாகும்.

## வெற்றி பெற்ற ஆக்கம்

**நான் எதிர்நோக்கிய இயற்கை அனர்த்தம் வெள்ளப் பெருக்காகும். இது என்னை மட்டுமல்ல; எனது அயல் வீடுகளையும் தாக்கியது. அச்சமயம் அயலிலுள்ள ஒருவர் விரைந்து வந்து பல உதவிகளைப் புரிந்தார்.**

**எமது வீடுகளில் நிறைந்திருந்த நீரைக் கண்ணுற்ற அவர் நீரை அப்புறப்படுத்த முனைந்ததுடன், செய்வதறியாது திகைத்து நின்ற எங்களை உடனடியாக அயலிலுள்ள ஒரு பாடசாலைக்கு அனுப்பினார். அத்துடன், மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக வாகனங்களை அழைத்து மருத்துவ சிகிச்சைக்காக அனுப்பினார். முதல் உதவிகளையும் செய்தார்.**

**பின்னர் வீடுகளில் தேங்கியிருந்த நீரை அப்புறப்படுத்தி, பொருட்களை பாதுகாப்பான இடத்திற்கு மாற்றம் செய்தார். சுத்தமான நீருடன், வெள்ளநீர் கலக்காமல் இருக்கும் வகையில் ஏற்பாடு செய்தார். மீண்டும் வெள்ளம் தாக்காமல் இருக்கும் வகையில் பலரின் ஒத்துழைப்பில் அணைக்கட்டுகளை அமைத்தார். சுகாதார வசதிகளை வழங்கவும் ஏற்பாடு செய்தார். இவ்வாறு சிரமம் பாராது கடமையாக எண்ணி பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றிய இவருக்கு நாம் என்றும் நன்றிக்கடன் பட்டுள்ளோம்.**

*நாகராஜா சங்கீர்த்தனா,*
*பதுளை.*



வெள்ளப்பெருக்கினால் உடைந்துள்ள பாலம்



சூறாவளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகம் எதிர்நோக்கவுள்ள 'வறட்சி'

**கடந்த சில நாட்களுக்கு முன் அமெரிக்காவின் 'கோல்ட்மன் செஷ்' எனுமிடத்தில் நடைபெற்ற உலக சூழலியல் நிபுணர்களின் ஒன்றுகூடலின்போது, உலகில் எதிர்நோக்கப்படுகின்ற 5 பிரதான அச்சுறுத்தல்கள் (அபாயங்கள்) குறித்து ஆராயப்பட்டன. அதன் முடிவில் இந்நூற்றாண்டில் உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பதோடு, மின்சக்தி மிக மோசமாக விரயமாகின்றது என்றும் இவை எல்லாவற்றையும் விட முக்கிய வளங்களில் ஒன்றாக விளங்கும் நீருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு, அதனால் உலகம் பெரும் நெருக்கடி நிலைக்கு உள்ளாகும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

பனிப்பாறைகளும் பனிப் படலங்களும் உருகி ஓடுவதன் காரணமாக, உலகின் பாவனைக் குரிய நீரின் அளவில் பாதிப்பு ஏற்படுகிறது. புவி வெப்பம் அதிகரிப்பதன் காரணமாக இப் பாதிப்பு விரைவுபடுத்தப்படுவ தோடு, அதனால் ஏற்படுத்தப்ப டுகின்ற தாக்கங்களின் அளவும் அதிகரிக்கின்றன.இதனுடன், நிலக்கீழ் நீரின் மூல ஊற்று மையங்களில் சிதைவுகள் ஏற்ப டுகின்றன என்றும் இம்மாநாட் டின்போது மேலும் எதிர்வு கூறப் பட்டுள்ளது.

இமயமலையில் உள்ள பனிப் பாறைகளின் அளவு குறைந்து வருவதால் அப்பிரதேசத்தில் மழைக்காலத்தில் நீர் உறிஞ்சப்ப டுவதோடு, வளமான மண்ணும் மழை வெள்ள நீருடன் கலந்து வங்காள விரிகுடாவை நோக்கி நேராகப் பாய்கின்றது. இது பேர ழிவை ஏற்படுத்தும் எனவும் முன்கூட்டிய எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.



### ஆசியாவின் பிரதான நதிகளின் பிறப்பிடம்

இமயமலைப் பிரதேசத்தில் குறிப்பிட்ட சில சதுர கிலோமீற் றர் அளவைக் கொண்ட வலயத் தினுள் ஆசியாவின் முக்கியமான பல நதிகளினதும் நீர்நிலைகளின தும் நீர் வழங்கும் மூல ஊற்றுக்கள் அமைந்திருக்கின்றன. இவற்றில் கங்கை நதி, மஞ்சள் நதி, யாங்சிகி நதி என்பன மாத்திரம் சுமார் 300 கோடி மக்களைப் போஷிக் கின்றன. இது உலக மக்கள் தொகையில் ஏறக்குறைய அரை வாசியாகும்.

### குறைவடையும் நீர்

நுகரப்படும் நீர் வளமானது குறைவடைந்து செல்வது குறித்து இதுவரை அதிகமான நாடுகள் சிறி தேனும் கவலை கொண் டதாகவோ, இது குறித்து முன்னெச்ச ரிக்கை நடவடிக்கை களை மேற்கொண்டதா கவோ தெரியவில்லை என உலக வங்கியின் முன்னாள் பிரதான பொருளியல் நிபுணரான லோட்ஸ்டர்ன் குற்றம் சாட்டுகி றார். மீளப் புதுப்பிக்க முடியாத அரிய வளமாகிய நீரை

**விரைவில் உலகம் பாரிய வறட்சியை எதிர்கொள்ளும் என 'உலகில் எதிர்நோக்கப்படுகின்ற 5 பிரதான அச்சுறுத்தல்கள்' தொடர்பான மாநாட்டில் சூழலியலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்**



எந்தவொரு வாதப் பிரதிவாதங்களுமில்லாமல் அளவுடன் சிக்கனமாகப் பாவிப்பதோடு, குறைவற்ற ரீதி யில் பெற்றுக்கொள்வதிலும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவிக்கின் றார். உலக நீர்த்தேவையில் 70% மானவை விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. மின்சார உற்பத்திக்காகப் பயன்படுத்தப்ப டும் நன்னீர் பெரும்பாலும் ஆவி யாக்கத்திற்கு உட்படுவதால் அவை மீண்டும் நிலக்கீழ் நீரின் மூல மையத்துடன் சேராமல் இருக் கின்றது என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

### எதிர்கால கனிய எண்ணெய்

'கோல்ட்மன் செஷ்' நிறுவனமா னது, நீரை 'அடுத்த நூற்றாண்டின் கனிய எண்ணெய்' என்றே குறிப் பிடுகின்றது. மேலதிக நீர் மூல உற் பத்தி மையங்களைப் பாதுகாப்ப தற்காக தற்போது எடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு பெருந் தொகைப் பணம் செலவிடப்படு கின்றது. இதில் ஐக்கிய அமெரிக் காவிற்கு மாத்திரம் 1000 பில்லி யன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாகக் குறிப்பிடப் படுகின்றது.

ஒவ்வொரு 20 வருடங்களுக்கு ஒருமுறை பாவனைக்குத் தேவை யான நீரின் அளவு இரு மடங்கா கின்றது. அத்துடன், 2025 ஆம் ஆண்டளவில் உலகின் மொத்த சனத்தொகையில் 1/3 பங்கினருக் கான குடிநீர் கிடைக்காமல் போகும் அபாயம் எழும் எனவும் மாநாட்டில் கூறப் பட்டுள்ளது.

முழு ஆசியாவிலும் விலங்கு வேளாண்மை பெருமளவில் மேற்கொள் ளப்படுவதும் இந்த நீர்த் தட்டுப்பாட்டிற்கான முக்கிய காரணிகளில் ஒன் றெனக் கருதப்படுகின்றது. ஒரு கிலோ மாட்டிறைச் சியை உற்பத்தி செய்ய 15 கனமீற்றர் நீர் செலவாகின் றது. கோழி இறைச்சியை உற்பத்தி செய்ய 6 கனமீற்றர் நீரும் சோளம் உற்பத்தி செய்ய 1.5 கனமீற்றர் நீரும் செலவா கின்றது என அறியப்பட் டுள்ளது.

ஆகவே, இந்நிலை தொடருமிடத்து நீரின் தட்டுப்பாட்டாலும் அதனால் ஏற்படக்கூடிய வறட்சியாலும் உலகம் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள இருப்பது திண்ணம். இதனைக் கருத்தில் கொண்டு செயற்படுவது காலத்தின் தேவையாக உள்ளது.

-இரஞ்சித் ஜெயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏரியில் மறைந்து முக்கிய தினங்களில் வெளிவரும் ஆமை



**வியட்நாமின் தலைநகரான ஹனோய் நகரின் மத்தியில் அமைந்துள்ள மிகப்பெரிய ஏரியில் இருள் சூழ்ந்த நீருக்கு அடியில் அபூர்வ உயிரினம் ஒன்று வாழ்கின்றது. அது தான் இராட்சத ஆமை. எனினும், இன்று சூழல் மாசடைந்துள்ள காரணத்தால் இந்த அழகிய ஏரியும் அதில் வாழும் இராட்சத ஆமையும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன. இந்த ரம்மியமான ஏரியையும் அதிலுள்ள ஆமையையும் காப்பாற்ற நவீன தொழில்நுட்ப முறையின் மூலம் தீர்வு காண வியட்நாம் மற்றும் ஜேர்மன் விஞ்ஞானிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.**

## ஹுவாய்கெம் ஏரி

2010ஆம் ஆண்டில் ஹனோய் நகரம் தனது 1000மாவது நிறைவு விழாவை கொண்டாடத் தயாராகி வருகின்றது. அதன் ஆரம்பகட்ட செயல்பாடாக ஹனோய் நகருக்கு வரலாற்றுப் பெறுமதியை அள்ளித்தரும் தற்பொழுது சூழல் மாசடைவிற்கு உட்பட்ட 'ஹுவாய் கெம்' ஏரியை சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்துடன், இந்த இராட்சத ஆமையை காப்பாற்றுவதும் அதன் மற்றொரு நடவடிக்கையாகும். இந்த இராட்சத ஆமையை பல நூறு வருடங்களாக வியட்நாமியர் நடத்திய சுதந்திரப் போராட்டத்தின் அடையாளமாக அல்லது குறியீடாக கருதுகின்றனர்.

வியட்நாமிய மற்றும்ஜேர்மனிய விஞ்ஞானிகளும் சூழலியலாளர்களும் இப்பணியை மேற்கொள்வதற்கு புதுவிதமானதொரு உபகரணத்தைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளனர். இந்த உபகரணம் ஒரு வகையில் நீர்மூழ்கி போன்றது. இதற்குப் பயன்படுத்துவது நீர்மூழ்கிக்குரிய தொழில்நுட்பமே. இந்த உபகாரணத்தை ஏரியின் அடிப்பகுதிக்கு அனுப்பி அடிப்பகுதியிலுள்ள விஷக்கழிவுகளை உறிஞ்சி வெளியேற்ற எண்ணியுள்ளனர்.

பச்சைநிறப் பாசிபடிந்துள்ள அடிப்பாகம் தெளிவாகத் தெரியாத ஹுவாய்கெம் ஏரியில், வாழும் இந்த இராட்சத ஆமையானது வியட்நாமிய கிராமியக் கதைகளில் எப்பொழுதும் குறிப்பிடப்படும் ஓர் உயிரினமாகும். இந்த ஆமையை மையமாக வைத்து எழுதப்பட்ட கதைகள் பல வியட்நாமிய பாடசாலைகளின் தேசிய பாடத்திட்டத்தில் கூட சேர்க்கப்பட்டுள்ளன.

## அபூர்வமாகவே காணலாம்

இன்று இந்த இராட்சத ஆமையை மிக மிக அபூர்வமாகவே காணலாம். இந்த விஷேஷ வகையான ஆமை ஒரு காலத்தில் முழுமையாக அழிந்துவிடும் என வியட்நாம் உயிரியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். எனினும்,இந்த ஆமையின் இராட்சதத் தலை நீருக்கு வெளியே நீட்டிக்கொண்டிருப்பதை அபூர்வமாகக் காணலாம். அவ்வாறு காண்பதை ஒரு புறம் கெட்ட சகுனமாகவும் மறுபுறம் அதிர்ஷ்டமாகவும் வியட்னாமியர்கள் கருதுகின்றனர். இதனைக் காண்பதற்காக பெருங்கூட்டமாக வியட்னாமியர்கள் ஏரிக்கரையில் முண்டியடிப்பர். இதில் மற்றொரு புதுமை என்னவென்றால் வியட்நாமியர்களின் முக்கிய தினங்களில் மாத்திரமே இந்த ஆமை நீருக்கு வெளியே தலையை காட்டுகின்றது.

## ஆமைப் பேராசிரியர்

1991 முதல் இன்றுவரை 400 தடவைகள் இந்த ஆமை ஏரிக்கு மேல் தன் தலையைக் காட்டியதாக ஹனோய் பல்கலைக்கழகப் பேராசிரியரான கலாநிதி டின்டன் தெரிவித்தார். இவரை வியட்னாம் வாசிகள் 'ஆமைப்பேராசிரியர்' என்றே அழைக்கின்றனர். வியட்னாம் நாட்டின் முக்கிய தினங்களில் இந்த ஆமை நீருக்கு மேல் தோன்றுவது ஒரு புரியாத புதிராகவே இருப்பதாக பேராசிரியர் உள்ளிட்ட பலரதும் கருத்தாக இருக்கின்றது.

அண்மையில் சீன ஜனாதிபதி வியட்நாமிற்கு வருகை தந்தபொழுதும் சக்கரவர்த்தி லீலோயின் சிலை திறப்பு விழாவின் போதும், வியட்நாமின் ஆளும் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியின் சம்மேளனத்தின் பொழுதும் அழிவுறும் உயிரிணங்களைப் பாதுகாக்கும் சர்வதேச மாநாடு ஹனோய் நகரில் நடந்த பொழுதும் இந்த ஆமை நீருக்கு வெளியே தோன்றியுள்ளது. ஏரியில் வாழும் இந்த ஆமையின் வயது எத்தனை என்பது குறித்து பேராசிரியருக்குத் தெரியவில்லை. இந்த வகை ஆமைகளுக்கு 'ரபேஃடஸ் லெலொய்ஸ்' என பெயரிட்டுள்ளனர். இத்தகைய ஆமையொன்று 200 கிலோ கிராம் நிறையைக் கொண்டது. அதாவது ஏறக்குறைய 440 இறாத்தல் நிறையுள்ள ரபேஃடஸ் லெலோய்ஸ் இன ஆமைகளில் 4 மாத்திரமே இந்த ஏரியில் உயிர் வாழ்ந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதில் ஒரு ஆமையின் பஞ்சால் நிரப்பப்பட்ட உடலை இந்த ஏரியின் மத்தியில் அமைந்துள்ள சிறிய தீவில் காட்சிக்காக வைத்துள்ளனர். இப்பொழுது ஒரே ஒரு இராட்சத ஆமை மாத்திரமே இந்த ஏரியில் வாழ்ந்து வருகின்றது. அதனால்தான் அதனையும் அதன் வாழ்விடத்தையும் பாதுகாக்க வியட்நாம் மக்கள் பெரும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

நாளுக்கு நாள் முன்னேறி வரும் ஹனோய் நகரில் கழிவுப் பொருட்கள் மழைநீரினால் அடித்து வரப்பட்டு இந்நதியில் கலந்து விடுகிறது. அக்கழிவில் காபன் கழிவுகளும் இரசாயன நச்சுப் பொருட்களும் காணப்படுகின்றன. இதனால், ஒட்சிசனின் அளவும் ஓரளவு குறைவடைகின்றது. இப்பொழுது ஏரியின் நீரும் மிக விரைவாக அசுத்தமடைந்து வருகின்றது. நூற்றுக்கணக்கான வருடங்களாக காணப்பட்ட அற்புத நீரியல் சூழ்நிலை முழுமையாக அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. மேற்குறித்த கருத்தினை இத்திட்டத்திற்கான ஜேர்மனிய ட்ரேஸ்டன் தொழில்நுட்ப பல்கலைக்கழக பேராசிரியர் பீட்டர் வர்னர் தெரிவித்தார். இது தொடர்ந்தால் இன்னும் 10 வருடங்களில் இந்த ஏரியும் அதில் வாழும் உயிரினங்களும் முற்றாக அழிந்து விடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## செடீடர்டல்


ஜேர்மனிய விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டுள்ள இந்த தொலை இயக்க உபகரணமானது ஏரியின் அடியில்''வெக்கும் கிளீனர்'' (Vaccum Cleaner) போன்று செயல்படக்கூடியது. அதற்கு ஏரியின் அடிவரைச் சென்று அதன்பின் ஏரியின் அடியில் அங்குமிங்கும் பல்வேறு பகுதிகளுக்கும் செல்லமுடியும். தேவையான இடங்களில் கழிவுகளை உறிஞ்சி வெளியேற்ற கூடிய முறையில் இந்த உபகரணம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த உபகரணத்தையே 'செடீடர்டல்' என அழைக்கின்றனர். இதற்கு நீர்மூழ்கி போல் பின் நோக்கி நீந்தவும் நீரின் உள்ளே சென்று மேலே வரவும் முடியும்.'ஹுவான் கேம்' ஏரியானது 600 மீற்றர் நீளமானது, 200 மீற்றர் அகலமானது. இதன் ஆழமோ 1.5 மீற்றராகும். ஆனால், கழிவுப் பொருட்களோ 4 முதல் 6 மீற்றருக்கிடையிலான அளவு அடியில் தேங்கிக் கிடக்கின்றது. எனவே ஏரியைச் சுத்தப்படுத்தும் ஆரம்ப வேலைகளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உகண்டா




கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள உகண்டா முற்றுமுழுதாக நிலப்பகுதிகளால் சூழ்ந்த ஒரு நாடாகும். இதன் எல்லைகளாக கிழக்கே கென்யாவும் வடக்கே சூடானும், மேற்கில் கொங்கோ ஜனநாயகக் குடியரசும் தென்மேற்கே ருவண்டாவும் தெற்கே தன்சானியாவும் அமைந்துள்ளன. 80 மாவட்டங்களைக் கொண்ட உகண்டா வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் மேற்கு என நான்கு நிர்வாக மாகாணங்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. உகண்டாவின் நிலப்பரப்பு பெரும்பாலும் வளம் மிகுந்த உயர் நிலங்களையும் பாரிய ஏரிகளையும் கொண்டு காணப்படுகின்றது. பல்வேறு இன மக்களின் வாழ்விடமான உகண்டாவில் 40 வெவ்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் வாழ்கின்றனர். உகண்டா மக்களில் பெரும்பான்மையினரின் மதமாக கிறிஸ்தவ மதம் விளங்குகின்றது. தவிர, இஸ்லாம் மற்றும் சுதேச மத நம்பிக்கை கொண்டவர்களும் சிறுபான்மையாக இங்கு வாழ்கின்றனர்.



| | |
|---|---|
| தலைநகர் | : கம்பாலா |
| பெரிய நகர் | : கம்பாலா |
| அரச கரும மொழி | : ஆங்கிலம், ஸ்வாஹிலி |
| அரசு | : ஜனநாயக குடியரசு |
| ஜனாதிபதி | : யொவேரி முசவெனி |
| பிரதமர் | : அப்பலோ நிசிபாம்பி |
| மொத்த நிலப்பரப்பு | : 236, 040 சதுர கிலோமீற்றர் (இதில் 15.39% நன்னீர் தேக்கமாகும்) |
| உத்தேச சனத்தொகை (2007) | : 30,990,000 |
| சனத்தொகை (2002) | : 24,442, 084 |
| மொத்த தேசிய உற்பத்தி | : 52.93 பில்லியன் டொலர் (83 ஆவது இடம்) |
| தனிநபர் சராசரி வருமானம் | : 900 டொலர் (186 ஆவது இடம்) |
| மனித அபிவிருத்தி சுட்டி | : 0.505 (154 ஆவது இடம்) |
| நாணயம் | : உகண்டன் சிலின். |
| நேரம் | : கிரீன்வீச் நேரத்தை விட 3 மணித்தியாலம் முன்பதாக |
| இணையத்தள குறியீடு | : .ug |
| சர்வதேச தொலைபேசி இலக்கம் | : +256. |



## வரலாறு

புராதன வரலாற்றுத் தகவல்களின் படி வேட்டையாடி உணவைச் சேகரிக்கும் வேடுவர்களே உகண்டாவின் ஆரம்பகாலக் குடிகளாக கருதப்படுகின்றனர். 1000 வருடம் முதல் 1500 வருடத்திற்கு உட்பட்ட காலப்பகுதியில் பண்டுமொழி பேசும் மக்கள் மேற்கு ஆபிரிக்காவில் இருந்தும் மத்திய ஆபிரிக்காவில் இருந்தும் இடம் பெயர்ந்து இங்கு வந்து குடியேறினர். 'லூவோ' மற்றும் 'அட்கர்' கோத்திரத்தார் உள்ளிட்ட 'நிலோடிக்' வாசிகள் வட பிரதேசத்தில் இருந்து கி.பி 120 ஆம் ஆண்டளவில் இடம் பெயர்ந்து இப்பிரதேசத்தில் குடியேறினர். தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்த விவசாயத்தையும் மாடு வளர்ப்பினையும் மேற்கொண்ட இம்மக்கள் இப்பிரதேசத்தின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசத்தில் தமது வசிப்பிடங்களை அமைத்துக் கொண்டனர்.

'லூவோ' கோத்திரவாசிகளில் பெரும்பான்மையோர் இக்காலகட்டத்தில் குறிப்பிட்ட பிரதேசத்தை ஆக்கிரமித்திருந்தனர். 16 ஆம் நூற்றாண்டு வரை தமது நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த 'லூவோ' இனத்தவர்கள் இப்பிரதேசத்தில் தமது இருப்பை நிலைநிறுத்திக்கொண்டு கிழக்கு உகண்டாவில் 'பண்டு' வாசிகள் மீதும் 'விக்டோரியா' ஏரி மற்றும் மேற்குத் திசையிலுள்ள கென்யா மற்றும் தன்சானியா மீதும் தமது பார்வையைச் செலுத்தினர். இதற்கிடையில் நாட்டின் வடகிழக்கு மற்றும் கிழக்குப் பிரதேசத்தில் நிலையான குடியேற்றங்களை அமைத்துக்கொண்ட 'அட்கர்' கோத்திரவாசிகளில் சிலர் 'க்யோகா' ஏரியின் வட பிரதேசத்தின் வழியாக 'லூவோ' கோத்திரத்தாருடன் ஒன்றிணைந்தனர்.

அரேபிய வர்த்தகர்கள் 1830 இல் இந்து சமுத்திரத்தின் ஊடாக கிழக்கு ஆபிரிக்காவிற்கு வந்தனர். எனினும், 1860 இல் பிரித்தானிய தேச ஆய்வுக் குழுவினர் ஆபிரிக்காவின் வடக்கே நோக்கிப் பாயும் பிரதான நதியாகிய 'நைல் நதி' உற்பத்தியாகும் இடத்தைத் தேடிப் பயணிக்கும் பொழுது அரேபிய வர்த்தகர்களைச் சந்திக்க நேரிட்டது. பின்னர் 1888 இல் பிரித்தானியாவின் கிழக்கு ஆபிரிக்க குழுவின் ஒப்பந்தப்படி ஐக்கிய இராச்சியமான பிரித்தானியா தனது பாதுகாப்புப் பிரதேசமாக இப்பிரதேசத்தை ஆட்சி செய்தது. ஏனைய பல பிரதேசங்களையும் இணைத்துக்கொண்டு இறுதியாக விசாலமான பாதுகாப்பு வலயப் பிரதேசம் ஒன்றை அமைத்து 1914 இல் அதற்கு 'உகண்டா' என பெயர் வைத்தது. பின்னர் 1962 இல் உகண்டா சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. அதன்பின்னர், தேர்தல் நடத்தப்பட்டு அதன் முதல் பிரதமராக எட்வர்ட் மயூடெசா தெரிவுசெய்யப்பட்டார். உகண்டாவின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமராக மில்டன் ஒபோட்டோ தெரிவு செய்யப்பட்டார்.



1971 ஆம் ஆண்டில் பிரதமர் மில்டன் ஒபோட்டோவை பதவி நீக்கம் செய்து, இராணுவத் தலைவர் இடி அமீன் ஆட்சியைக் கைப்பற்றினார். இடி அமீனின் குரூரமான ஆட்சி உலகப் பிரசித்தி பெற்றது. 1979 ஆம் ஆண்டில் தன்சானியாவின் துணையுடன் நடைபெற்ற இராணுவப் புரட்சியில் பதவி நீக்கம் செய்யப்பட்ட இடி அமீன் நாட்டிலிருந்து தப்பி ஓடினார். 2006 பெப்ரவரியில் அனைத்துக் கட்சியும் பங்குபெறும் தேர்தலில் அதிபர் முசவெனி வெற்றி பெற்றார்.

## பொருளாதாரம்

1971 இல் இடி அமீனின் ஆட்சி நடைபெற்ற காலத்திலும் அதன் பின்னரும் நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தால் நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவு ஏற்பட்டது. எனினும், சக்தி வாய்ந்த தீவிர விவசாய நடவடிக்கைகளால் 80% இற்கும் அதிகமான விவசாய உழைக்கும் வர்க்கத்தின் கடும் உழைப்பினால் 1980 களின் மத்தியில் ஓரளவு தமது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதில் உகண்டா மக்கள் வெற்றி பெற்றனர். இவர்களின் பிரதான உணவு உற்பத்திப் பயிராக மரவள்ளி, வற்றாளைக் கிழங்கு, வாழை, மெனேரி, மக்காச்சோளம், சோளம் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன. பிரதான வர்த்தகப் பயிர்களாக கோப்பி, பருத்தி, தேயிலை, புகையிலை மற்றும் கரும்பு என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன. அத்துடன், மீன்பிடித் தொழிலும், மரம் தரித்தலும் உகண்டாவின் பொருளாதாரத்தில் முக்கிய பங்களிப்பைச் செலுத்துகின்றன. கைத்தொழில்துறையைப் பொறுத்தமட்டில் புடைவைக் கைத்தொழில், இரசாயனப் பசளை மற்றும் சீமெந்து உற்பத்தி என்பனவற்றிலும் உகண்டா முக்கிய இடத்தை வகிக்கின்றது.

உகண்டாவின் முக்கிய வர்த்தகத் தொடர்புள்ள நாடுகளாக ஐரோப்பிய யூனியன் நாடுகளும் கென்யாவும் ஜப்பானும் திகழ்கின்றன.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொண்டையில் ஏற்படும் 'தைரொய்ட்' பிரச்சினை



கழுத்தின் முன்புறமாக தொண்டைப் பகுதியில் சிலருக்கு வீங்கியிருப்பதை நாம் கண்டிருக்கின்றோம். இவ்வாறு வீக்கம் ஏற்பட்டிருப்பதையே 'தைரொய்ட்' என்று கூறப்படுகின்றது. இது எவ்வாறு ஏற்படுகின்றதென்றால்




கழுத்தின் முன்புறமாக 'தைரொய்ட் கோளம்' என்ற பகுதி அமைந்துள்ளது. இது T-3, T-4 என்ற இரண்டு வகையான ஹோர்மோன்களைச் சுரக்கின்றது. 'அயடின்' சத்து நிறைந்த இந்த ஹோர்மோன்கள் நம் உடல் வளர்ச்சியின் சீரான



தன்மைக்குத் தேவையானவை. இந்த தைரொய்ட் ஹோர்மோன்களை மூளையின் அடிப்புறத்தில் உள்ள 'பிட்யூட்டரி' என்ற கோளம் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. இதிலிருந்து சுரக்கும் 'டி.எஸ்.எச்' என்னும் ஹோர்மோன் தைரொய்ட் சுரப்பைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்.

தைரொய்ட் குறைவாகச் சுரக்கும் பொழுது 'ஹைப்போதைரொய்டிசம்' என்றும், அதிகமாகச் சுரக்கும்பொழுது 'ஹைப்பர் தைரொய்டிசம்' என்றும் இதனை மருத்துவத்துறையினர் வகைப்படுத்தியுள்ளனர்.

'ஹைப்போதைரொய்டிசம்' ஏற்பட்டால் அதுவரை முனைப்புடன் செய்து வந்த காரியங்களில் ஆர்வம் குறைந்து போகும். செயல்களில் ஒரு மந்தத்தன்மை தோன்றும். அறிவு நிலையில் படிப்படியான தரக்குறைவு ஏற்படும். மன அழுத்தம் அதிகரிக்கும். சமீபத்தில் நடந்தவை கூட மறந்து போகும்.

ஹைப்போதைரொய்டிசத்தை உரிய காலத்தில் கவனித்துச் சிகிச் சையளிக்கத் தவறி னால், மனநிலை பாதிப்போ அல்லது மூளை தொடர் பான வேறு ஏதும் நிரந்தரப் பிரச் சினையோ ஏற்பட லாம்.

ஹைப்போதைரொய்டி சத்தினால் பாதிக்கப்பட்டவர் கள் பதற்றத்துடன் பொறுமை யின்மை, எரிச்சலடைதல் என திகைப்பூட்டும் விதத்தில் மிகைப்படுத்தலுடன் நடந்து கொள்வர். சத்தத்தை இவர்கள் அளவுக்கதிகமாக வெறுப்பார்கள். பசி, தூக்கம் இவற்றில் குளறுபடிகள் ஏற்படும்.

'தைரொய்ட்' பிரச்சினை உள்ளவர்களின் மனநிலையும் செயல்பாடுகளும் இயல்பு நிலைக்கு மாறாக இருப்பதைக் கண்டு அவருக்கு 'மூளைக் கோளாறு' என்று தவறாகப் புரிந்து கொண்டு மனநல விடுதியில் சேர்த்து மாதக்கணக்கில் சிகிச்சையளித்தும் குணமாகாத பரிதாப சம்பவங்கள் சில நேரங்களில் நடப்பதுண்டு.

'தைரொய்ட்' பிரச்சினைகளை இரத்தப் பரிசோதனை அல்லது 'அல்ட்ராசோனோகிராம்' பரிசோதனை மூலம் அறியலாம். இந்த நோய் உள்ளவர்கள் 'அயடின்' சத்தினை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். முளைப் பயறுகள், பச்சைக் காய்கறிகள், கீரை வகைகளைத் தொடர்ந்து சாப்பிட வேண்டும் என்றும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சீன நாகரிகத்

சீன நாகரிகம் உலகின் மிகவும் தொன்மையான நாகரிகமாகும். சீனாவின் பெருமை மிக்க நாகரிகமானது கி.மு 15 ஆம் நூற்றாண்டுகளுக்கு முந்தைய வரலாற்றினை கொண்டதாகும். அன்றைய காலத்தில் ஷெங் ஏகாதிபத்தியத்தின்போது ஆமை ஓடுகளில் எழுதப்பட்ட சீன எழுத்துக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன், அவை 3,500 வருடங்களுக்கு முற்பட்டது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த மிகப் பழைமையான நாகரிகமானது சீனாவின் துயரம் என்றும் 'மஞ்சள் நதி' என்றும் அழைக்கப்படும் 'ஹுவாங் ஹோ' நதிக் கரையோரமாகவும் 'ஷெங் ஜீயேன்' நதிக் கரையோரமாகவும் தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகின்றது.

## சீனாவின் முன்னோர்கள்

சீன வரலாறு எப்பொழுது ஆரம்பமானது என்பதனை தெளிவாகக் கூற முடியாது. எனினும் தொல்லியல் ஆய்வுகளின் அடிப்படையில் சீனாவின் ஆதிகாலத்தவர்கள் கி.மு 250,000 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. தற்போதைய பீஜிங் நகரின் அருகாமையில் அமைந்திருந்த ஷோக் கோடியன் லெனென் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்கள் 300,000 ஆண்டுகளுக்கும் 550,000 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப் பருவத்தைச் சேர்ந்தது என்று தெரியவந்துள்ளது. இந்த பழைமையான காலப்பகுதியில் வாழ்ந்த ஆதி காலத்தவர்கள் கை யுவான், லான் தியென், பீக்கிங் ஆகிய பெயர்களில் அழைக்கப்படும் வானர மனிதர்கள் என்று அறியப்பட்டுள்ளது. இவை தொடர்பான ஆதாரங்களை சீனாவின் யுன்னான், ஹோனான், ஹோபெய் ஆகிய பகுதிகளில் கண்டறிந்துள்ளனர். இவற்றில் மிகப் பிரபல்யம் பெற்ற பீக்கிங் (தற்போது பீஜிங்) பகுதியில் கண்டறியப்பட்ட மானிடர்கள் பற்றிய தகவல்களாகும். பீக்கிங் மானிடர்கள் கி.மு 400,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருக்கின்றார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது.

## புதிய ஒழுக்க யுகம்

தொல்லியல் ஆய்வுகளுக்கு ஏற்ப சீனாவின் புதிய ஒழுக்க யுகம் கி.மு 7000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமாகியுள்ளது. புதிய ஒழுக்க யுகத்தின் கலாசாரம் குறித்து ஹொனான் பகுதியின் யங்ஷாஹோ,ஷங்துன் பகுதியிலும், லுங்ஷன், ஜியங்சு பகுதிகளில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளில் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தக் காலப் பகுதியில் வாழ்ந்த சீனர்கள் வேட்டையாடுதல் முதல் கால்நடைகளை வளர்க்கவும் விவசாயம் செய்யவும் ஆரம்பித்ததாகத் தெரிய வந்துள்ளது.

## சீன நாகரிகம்


சீன இலக்கிய சம்பிரதாயங்களின்படி, சீன நாகரிகம் கி.மு 3000 ஆண்டுகளுக்கு முன்னர் வடபகுதி நதிக்கரையோரங்களில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமங்களின் ஊடாகத் தோன்றியுள்ளது. உலகின் ஏனைய நாகரிகங்களின் வரலாற்றினை நோக்கும்போது இந்தக் காலப்பகுதி மொசப்பத்தேமியா, நைல் மற்றும் இந்து ஆகிய பழைய நாகரிகங்கள் ஆரம்பமான காலப்பகுதியுடன் ஒத்ததாகும். தொல்லியல் ஆய்வுகளின் முடிவுக்கு ஏற்ப இந்தக் காலப்பகுதி புதிய ஒழுக்க யுகத்திற்குரியதாகும். பண்டைய விவசாயிகள் களிமண் குடிசைகளில் வசித்திருக்கின்றார்கள். எனினும், முன்னைய காலம் முதல் நிறம் தீட்டப்பட்ட மட்பாண்டங்களை உருவாக்கும் ஆற்றல் அவர்களுக்கு இருந்தது. முன்னோர்களை வணங்குவதே அவர்களின் மத நடைமுறையாகும். விலங்குகளின் எலும்புகளைக் கொண்டு எதிர்காலம் பற்றிக் கணிப்பிடும் ஆற்றல் அவர்களின் மதப்பெரியவர்களுக்கு இருந்தது.


## ஆதிகால சீன ஆட்சியாளர்கள்

சீனாவின் ஆதிகால ஆட்சியாளர்கள் (Sage Kings) என்று அழைக்கப்பட்டனர். இதில் அரசர்கள் மூவரும், சர்வாதிகாரிகள் ஐவரும் இருந்துள்ளனர். அவர்கள் புத்திக்கூர்மை மிக்கவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் இருந்துள்ளனர். அவர்கள் முதுமை அடைந்ததும் தமது சிம்மாசனத்தினை மிகவும் பொருத்தமானவருக்கு அளித்து விட்டு சுய விருப்புடன் ஓய்வு பெற்றுக்கொண்டனர். யஒ மற்றும் ஷுன் ஆகிய இரண்டு அரசர்களும் திறமையான அமைச்சர்களுக்கு தமது அரசுரிமையை ஒப்படைத்து விட்டே ஓய்வு பெற்றுக் கொண்டனர். தந்தையரிடமிருந்து மகனுக்கு அரசுரிமை செல்லும் நடைமுறை அன்று இருக்கவில்லை.

## சீன நாகரிகத்தின் முன்னேற்றங்கள்

மீன்பிடி, விவசாயம், வர்த்தகம் என்பன இக்காலத்தில் நடைபெற்றுள்ளன. காலசக்கரம், மருத்துவம், எழுத்துக்கலை ஆகியவையும் இருந்துள்ளன. இந்தக் காலப்பகுதியில் வாழ்ந்த பழங்குடியினர் மிகவும் ஒற்றுமையாக இருந்துள்ளனர். இந்தக் காலத்தின் இறுதி அரசனான 'யு' அரசனின் ஆட்சியின் பின்னரே குடும்ப வாரிசு அரசியல் நடைமுறை ஆரம்பமாயிற்று.


சீனாவின் தடை செய்யப்பட்ட நகரம்


யெங்சி நதி

## கொன்பூசியஸ்

மேற்கில் இருந்து வந்த 'ச்சென்' ஆக்கிரமிப்பாளர்கள் 'ஷெங்' ஆட்சியினை வீழ்த்தி சுமார் 800 ஆண்டுகள் வரை சீனாவை ஆட்சி புரிந்தனர். இந்தக் காலப்பகுதியில் தத்துவமேதைகள், தத்துவப்பிரசாரங்களை மேற்கொண்டு வந்தனர். இவர்களில் மிகவும் சிரேஷ்டத்துவம் வாய்ந்தவராக குங் புட்சு என்று அழைக்கப்படும் கொன்பூசியஸ் முக்கியமானவராவார். புத்தரின் சம காலத்தவரான அவர் கி.மு 550-480 காலப்பகுதியில் வாழ்ந்தவராவார். நல்லதைச் செய்ய அனைவருக்கும் பலம் உண்டு என்றும் ஆட்சியாளர்களுக்கு ஆளும் பலம் கடவுளின் உலகில் இருந்து கிடைத்துள்ளதாகவும் அதனால், மக்கள் நலனையே முக்கியத்துவப்படுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். சட்டம், ஒழுங்கு, நம்பகத்தன்மை, பெற்றோரினை மதித்தல், நாட்டை நிர்வகித்தல் அவர்களின் கடமையாகும். தராதரம் பாராது தகுதி வாய்ந்தவருக்கு இடமளிக்க வேண்டும் என்பதே அவரது தத்துவமாகும். அதன்படி அன்று சீன அதிகாரிகள் உயர்தரமான பரீட்சை ஒன்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்.


டெராகோட்டா சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கத்தின் வரலாறு





சீனப்பெருஞ்சுவர்

...னர்.
...
...
...ானவ
...ும்
...ரசுரி
...்து

...க்
...னர்.
...ப

## ஷெங் ராஜபரம்பரையின் ஆரம்பம்

ஆட்சியினை ஆரம்பித்த முதல் ராஜபரம்பரை 'ஷெங்' பரம்பரையேயாகும். அவர்கள் 1500 ஆம் ஆண்டு முதல் வட சீனப் பகுதிகளில் ஆட்சி புரிய ஆரம்பித்தனர். ஷெங் மன்ன ராட்சியின் தலைநகராக அன்யங் நகரம் விளங்கியது. வர்த்தகர்கள் மற்றும் கைப்பணிப் பொருட்களின் தயாரிப்பாளர்கள் ஆகியோரினால் அமைக்கப்பட்ட நகரங்கள் அதனைச் சுற்றிக் காணப்படுகின்றன. அதேவேளை, திறமையான உலோக உற்பத்தியாளர்களும் இந்த நகரங்களில் வாழ்ந்து வந்ததுடன் இவர்களில் பெருமளவானோருக்கு எழுதப்படிக்கும் ஆற்றலும் இருந்துள்ளது.

## நகரின் பாதுகாப்புக்கு நரபலி பூசை

அன்யங் நகரில் கட்டடங்கள் அமைக்கப்படுவதற்கு முன்பு ஆண்களும் பெண்களும் நரபலி கொடுக்கப்பட்டு அவர்களின் சடலங்களின் மீது கட்டடங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஆய்வாளர்களுக்கு 852 எலும்புக்கூடுகள் கிடைத்துள்ளன. அவை நரபலி கொடுக்கப்பட்டவர்களின் எலும்புக்கூடுகள் என்றே கருதப்படுகின்றது. நகரில் வாழும் எதிர்கால சந்ததியினரின் பாதுகாப்புக் கருதி கடவுளின் பெயரால் இந்த நரபலி கொடுக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. மற்றொரு இடத்தில் இராணுவத்தினர் மற்றும் குதிரையுடன் கூடிய குதிரை வண்டிகளும் புதைக்கப்பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது.

...கதி



## ...ஸ்

...னை வீழ்த்தி
...ஆட்சி
...வமேதைகள்,
...வந்தனர்.
...ாய்ந்தவராக
...ன்பூசியஸ்
...லத்தவரான


...வுளின்
...அதனால்,
...த வேண்டும்
...ஒழுங்கு,
...ல், நாட்டை
... தராதரம்
...க வேண்டும்
...படி அன்று
...ஒன்றின்
...ர்.



கொன்பூசியஸ்

## ஷீ ஹுவாங் டீ

கி.மு 400 இல் உயர் குலத்தவர்களை தமது கட்டுக்குள் ஒற்றுமையாக வைத்திருக்க முடியாத நிலை ஆளும் தரப்புக்கு ஏற்பட்டது. இதனால், ஐக்கியம் பாதிக்கப்பட்டு பல பிராந்திய அரசுகள் தோற்றம் பெற்றன. நாளடைவில் இந்தப் பிராந்தியங்களுக்கிடையில் யுத்தம் ஏற்பட்டது. இவற்றை முடிவுக்குக் கொண்டு வந்து மீண்டும் நாட்டினை ஷீ ஹுவாங் டீ ஐக்கியப் படுத்தினார். சீனா என்ற பெயர் ஏற்படக் காரணமாக இருந்த 'ச்சீங்' அரசு ஸ்தாபிக்கப்பட்டது. அன்றைய பிராந்தியத் தலைவர்கள், இளவரசர்களின் நன்மதிப்பினைப் பெற்ற அவர் வட எல்லையைப் பாதுகாக்கும் முகமாக பெருஞ்சுவர்களை எழுப்பினார். இதனையே நாம் இன்று 'சீனப்பெருஞ்சுவர்' என்று அழைக்கின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ந்த பண்பு

ஓர் ஊரில் காஸிம் என்னும் செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவருக்கு இர்ஷாத், ரஹ்மான், கையூம் என்று மூன்று பிள்ளைகள் இருந்தனர். அவர்களுடைய தாய் பல வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார். தந்தையார்தான் பிள்ளைகளை பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் வளர்த்தார். பிள்ளைகள் வாலிப வயதை அடைந்தனர். காஸிம் வயது முதிர்ந்த நிலையில் நோயாளியாகி விட்டார். அப்பொழுது, அவர் எனக்குப் பிறகு என் பிள்ளைகள் சொத்துக்காக சண்டை பிடித்துக்கொள்ளக் கூடும் என்று நினைத்து சொத்துக்களை பிரித்துக் கொடுப்பதற்குத் தயாரானார். மூவரையும் அழைத்து ''பிள்ளைகளே! நான் என்னிடமுள்ள வைரக் கல்லைத் தவிர மற்ற எல்லாச் சொத்துக்களையும் உங்கள் மூவருக்கும் சமமாகப் பிரித்து விட்டேன். இந்த வைரக்கல் உங்களில் யார் சிறந்த வேலையை செய்திருக்கிறீர்களோ அவருக்குத்தான். அதனால் நீங்கள் செய்த வேலையில் சிறந்தது எது என்று யோசித்து விட்டு வந்து சொல்லுங்கள். அதன்பின்னர் உங்கள் மூவரில் யாருக்கு இந்த வைரக்கல்லை தருவதென்று முடிவு செய்கிறேன்'' என்றார்.

முதலாவது மகன் யோசித்துவிட்டு வந்து தந்தையிடம், ''தந்தையே! எனக்கு அறிமுகம் இல்லாத ஒரு வயோதிபர் வந்து என்னிடம் பத்தாயிரம் ரூபாவைத் தந்து பாதுகாப்பாக வைத்திருக்கச் சொன்னார். நான் அதன்படி



வைத்துக் கொண்டிருக்கையில் சுமார் ஒரு வருடம் கழிந்தபின் அவர் வந்து பணத்தைக் கேட்டார். நான் நினைத்திருந்தால் சாட்சிகள் யாரும் இல்லாத நிலையில் அந்த முதியவரிடமிருந்து பணத்தை அபகரித்திருக்க முடியும். ஆனால், நான் அப்படிச் செய்யவில்லை. பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டேன். அதுதான் வாழ்க்கையில் நான் செய்த நல்ல காரியமாக இருக்கும்'' என்று கூறினான்.

''யாராவது நம்பி ஒரு பொருளைக் கொடுத்தால் அவருக்குத் துரோகம் செய்யாமல் திருப்பிக் கொடுப்பது உயர்ந்த குணம்'' என்றார் தந்தை.

பின்னர் இரண்டாவது மகன் வந்து தந்தையிடம் ''தந்தையே நான் ஒரு கடற்கரைக்கு அருகாமையில் சென்று கொண்டிருந்தபோது ஒரு தாய் தன்னுடைய மகன் கடலில் விழுந்துவிட்டதாகக் கூறி காப்பாற்ற இயலாமல் கூச்சலிட்டு அழுது கொண்டிருந்தார். அதை கண்ட எனக்கு மிகவும் கவலையாக இருந்ததால் என்னுடைய ஆடைகளைக் கழற்றி வைத்துவிட்டு கடலில் குதித்து அந்த சிறுவனைக் காப்பாற்றி அந்தத் தாயிடம் ஒப்படைத்தேன். என் வாழ்வில் நான் செய்த நல்ல காரியம் இதுதான் என்று நினைக்கிறேன்'' என்றான். இதைக் கேட்ட தந்தை ''மகனே! நீ அந்த நேரத்தில் காப்பாற்றவில்லையென்றால் அந்த சிறுவனும் அதே வேளை அவனுடைய தாயும் இறந்திருப்பார்கள். இப்படியான நேரத்தில் உதவி செய்வது மிக உயர்ந்த பண்பு, அதற்காக நான் உனக்கு நன்றி பாராட்டுகிறேன்'' என்றார்.

அதன் பிறகு மூன்றாவது மகன் தந்தையிடம் வந்து, ''தந்தையே! நானும் கடலுக்கு அருகில் சென்று கொண்டிருந்தபோது எனது பரம எதிரியான ஒருவன் கரையில் உறங்கிக் கொண்டு இருந்ததைக் கண்டேன். அதேவேளை, கடல் கொந்தளித்து அலை பலமாக வீசத் தொடங்கியது. அந்த சந்தர்ப்பத்தில் அவன் என் எதிரி என்பதை விட அவன் உயிரைக் காப்பாற்றுவது மட்டுமே என் நோக்கமாக இருந்தது. உடனே அவனருகில் போய் அவனை எழுப்பி அலையில் சிக்காமல் அவனைக் காப்பாற்றினேன்'' என்றான். தந்தை மகனை அன்புடன் அரவணைத்து ''மகனே! நீ செய்த இந்த செயல்தான் மற்றவர்கள் செய்தவற்றை விட மிக உயர்ந்த செயல். எதிரி என்றும் பாராமல் ஆபத்து நேரத்தில் உதவிய நீதான் மிகச் சிறந்த பண்புடையவன். நான் இல்லாத காலத்தில் உன் சகோதரர்களை நன்கு வழிநடத்தும் தகுதி உன்னிடமே இருக்கிறது. என் குறை தீர்ந்தது. இந்தா இந்த வைரக்கல் உங்கள் மூவருக்குமே இது சொந்தம்'' என்று கூறி வைரக்கல்லை அவர்களிடம் கொடுத்தார் தந்தை. மற்ற சகோதரர்களும் இதனால், பூரிப்படைந்தனர்.

**அப்துல் கையூம் முத்தலிப்,**
**க/கழுகமுவ ம.கல்., கெலிஓயா.**



## மூன்றெழுத்து

அம்மா என்பது மூன்றெழுத்து
அவள் தரும் அன்பு மூன்றெழுத்து
அன்பு தரும் அறிவு மூன்றெழுத்து

அறிவு தரும் கல்வி மூன்றெழுத்து
கல்வி தரும் பயன் மூன்றெழுத்து
பயன்தரும் செயல் மூன்றெழுத்து

செயல் தரும் பதவி மூன்றெழுத்து
பதவி தரும் பணம் மூன்றெழுத்து
பணம் தரும் சுகம் மூன்றெழுத்து

எம்.சபான்,
தரம் - 10^, நு/புனித சவேரியார் கல்.,
நுவரெலியா.

# ஈசாப்பின் நீதி




சிறுவர்களுக்கான நீதிக் கதைகள் பலவற்றை எழுதியவர் ஈஸாப்.

ஒருநாள் தனது நண்பர் ஒருவருடன் ஈசாப் தமது நாட்டின் வீதியோரமாக அமர்ந்திருந்தார். அந்த வழியாக சென்று கொண்டிருந்த ஒருவன் ஈசாப்பிடம் வந்தான். பின் ''உங்கள் நாட்டில் எப்படிப்பட்ட மக்கள் இருக்கின்றனர்?'' என்று கேட்டான்.

ஈசாப் அவனைப் பார்த்து, ''நீங்கள் எந்த நாட்டில் இருந்து வருகிறீர்கள்? உங்கள் ஊரில் எப்படிப்பட்ட மக்கள் இருக்கின்றனர்?'' என்று கேட்டார்.

அதற்கு அவன் முகத்தைச் சுளித்துக் கொண்டு,



''நான் ஆர்கோஸ் நாட்டில் இருந்து வருகிறேன். அங்குள்ள மக்கள் அனைவரும் திருடர்கள். சுயநலவாதிகள். எந்நேரமும் சண்டையிடுவார்கள். மிகவும் மோசமானவர்கள்'' என்று கூறினான்.

ஈசாப் அவனிடம் ''உங்களின் நாட்டு மக்களைப் போலத்தான் இந்த நாட்டு மக்களும் மோசமானவர்கள்'' என்று கூறினார். சிறிது நேரம் கழித்து இன்னொருவன் அங்கு வந்து ஈசாப்பிடம் அதே கேள்வியைக் கேட்டான்.

அவன் எந்த நாட்டிலிருந்து வருகிறான் என்றும் அவனுடைய நாட்டு மக்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதையும் கூறும்படி ஈசாப் கேட்டுக் கொண்டார். அதற்கு அவன், ''நான் ஆர்கோஸ் நாட்டிலிருந்து வருகிறேன். அங்கு வாழும் மக்கள் மிகவும் நல்லவர்கள். மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவர்கள். அவ்வளவு நல்ல நாட்டை விட்டு எனது மேல் படிப்புக்காகத்தான் இங்கு வந்தேன்'' என்று கூறினான்.

ஈசாப் அவனிடம், ''நண்பா! உன் நாட்டு மக்களைப் போலவே இவர்களும் நல்லவர்கள். இவர்களும் உனக்கு உதவி செய்வார்கள்'' என்று கூறினார்.

ஈசாப் இருவருக்கும் வெவ்வேறு விதமாகக் கூறியதை ஆச்சரியத்துடன் பார்த்தார் நண்பர். உடனே ஈசாப், ''கெட்டவன் எங்கு சென்றாலும் கெட்டவர்களுடைய சேர்க்கையைத்தான் நாடிச் செல்வான். நல்லவன் எங்கு சென்றாலும் நல்லவர்களுடைய சேர்க்கையைத்தான் நாடுவான். முன்பின் தெரியாத என்னிடம் தனது நாட்டைப் பற்றிக் குறை கூறியவன் எங்கு சென்றாலும் குறைதான் கண்டுபிடிப்பான். அதனால்தான் அப்படிக் கூறினேன்'' என்று சொன்னார்.

**எம்.எல்.எஃப்.ஹஸ்னா,**
**இ/பாலர் இயேசு கன்னியர் மடம் தேசிய பாட., இரத்தினபுரி.**

படத்தை
இங்கே
ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் கீழேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:..................................
முகவரி:..................................
..................................
பாடசாலை:..................................
வகுப்பு:..................................
திகதி: ..................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கைவண்ணங்கள்
## த.பெ.எண் 2037
## கொழும்பு



முஹம்மத் சாஜித்,
தரம் - $6^{A}$,
அல்-ஹிரா மு.ம.வித்.,
கொட்டாரமுல்லை.



ஏ.ஜெ.ஜஸாவுத்தீன்,
தரம் - 10,
அல்-மிஸ்பா மு.ம.வித்.,
பண்டாரகொஸ்வத்த.



எஸ்.கோபிநாத், தரம் - $7^{B}$,
க/கதிரேசன் மத்திய கல்.,
நாவலப்பிட்டி.



விதேஸ் சந்திரபாபு,
தரம் - $5^{B}$,
கொ/முகத்துவாரம் இந்து கல்., கொழும்பு-15.



இரா.கபிலன், தரம் - $10^{B}$,
நு/புனித சவேரியார் கல்.,
நுவரெலியா.




அபூபக்கர் பக்தாதி,
தரம் - $5^{A}$,
ஸாஹிரா கல்லூரி,
கொழும்பு.



எஃப்.சஸ்ணா,
க/உடதெனிய ம.ம.வித்.,
கண்டி.



ஜி.மனோஜ்பிரபாத்,
தரம் - $8^{A}$,
களுத்துறை மு.ம.கல்.,
களுத்துறை.



தல்கஸ்பிடியைச் சேர்ந்த ஹாலிகுஸ்ஸமான் தம்பதியரின் செல்வப்புதல்வன் ஹாதி, தனது முதலாவது பிறந்தநாளை 31.12.2008 ஆகிய இன்று தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை உற்றார், உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றனர்.

## விஜய் 'விழா உலா'
## த.பெ.எண் 2037
## கொழும்பு

குயில்வத்தை தமிழ் மகா வித்தியாலயத்தின் மாணவி முருகையா வித்தியரூபிணி இவ்வாண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் 114 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளதோடு, பாடசாலை மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் குயில்வத்தை பிரதேசத்தைச் சேர்ந்த முருகையா ஜெயக்கொடி தம்பதியரின் புதல்வி ஆவார்.





*அம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையில் தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையே அதிபருடன் படத்தில் காண்கிறீர்கள். இடமிருந்து வலமாக பஸ்லான் (116), எம்.எச்.ஹஸீன் அஹமட் (114), எஸ்.டீ.எம்.ஸாபிடீன் (124), அதிபர் அல்ஹாஜ் எம்.இஸட்.எம்.ஸாஹிர், எஸ்.எப்.ஸீயா (110), எம்.ஏ.எப்.ரிப்னா (134) ஆகியோர் காணப்படுகின்றனர்.*

தகவல்: எம்.இர்பான் ஸகரியா (ஆசிரிய ஆலோசகர்)
வலயக் கல்விக் காரியாலயம், அம்பாந்தோட்டை.



அங்.இல : 2307

எம்.உஸைர்,
தரம் - $10^{T}$,
கா/மல்ஹருஸ்ஸுல்ஹிய்யா தே.பா., காலி.



அங்.இல : 2308

என்.எஃப்.நுஹா,
தரம் - 1,
கமு/இமாம் கஸ்ஸாலி வித்.,
நிந்தவூர்.



அங்.இல : 2309

கே.நிரஞ்சன்,
தரம் - $4^{B}$,
பண்டாரவளை த.கல்.,
பண்டாரவளை.



அங்.இல : 2310

சற்குணராசா சோபிகா,
தரம் - $11^{B}$,
யா/மீசாலை வீரசிங்கம் ம.வித்.,
மீசாலை.

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 2311

எம்.சிமா,
தரம் - $5^{A}$,
தி/அல்-ஸாஹிரா மு.ம.வித்.,
கிண்ணியா-03.



அங்.இல : 2312

ர.ராஜ்கபூர்,
தரம் - 9,
மு/அலம்பில் ஆர்.சீ.பாட.,
முல்லைத்தீவு.



அங்.இல : 2313

எச்.இன்பால் அஹமட்,
தரம் - $9^{A}$,
அறபா தே.பாட.,
வெலிகாமம்.



அங்.இல : 2314

ச.லோகராஜ்,
தரம் - 11
மட்/மண்டூர் ம.வித்.,
மட்டக்களப்பு.



அங்.இல : 2315

எம்.ஸப்னாஸ்,
தரம் - $11^{B}$,
க/தெழும்புகஹவத்த மு.வித்.,
அக்குரனை.



அங்.இல : 2316

ஆர்.பிரியசாந்தன்,
தரம் - $8^{D}$,
ராகலை தமிழ் ம.வித்.,
ராகலை.



அங்.இல : 2317

எம்.சல்மான்,
தரம் - 11,
அல்-அக்ஸா தே.பாட.,
கற்பிட்டி.



அங்.இல : 2318

ப.அபிநயராஜ்,
தரம் - 12,
திம்புள்ள த.ம.வித்.,
பத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் சுனிலுக்கும் சுந்தரத்திற்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

සුන්දරම්: වේලාව කීය ද මහත්මයා?
වெளாவ கீயத மஹத்மயா?
சுந்தரம்: நேரம் என்ன ஐயா?



සුනිල්: දැන් වේලාව දෙකයි.
தென் வெளாவ தெகய்.
சுனில்: இப்போது நேரம் இரண்டு மணி.

සුන්දරම්: ස්තූතියි.
ஸ்தூதிய்.
சுந்தரம்: நன்றி.

සුනිල්: ඔයා කොහේ ඉඳලද එන්නේ?
ஒயா கொஹே இந்தளத என்னே?
சுனில்: நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?

සුන්දරම්: මම නුවර ඉඳල එනවා.
மம நுவர இந்தள எனவா.
சுந்தரம்: நான் கண்டியில் இருந்து வருகிறேன்.

සුනිල්: ඔයා කොහාටද යන්න ඕනේ?
ஒயா கொஹாடத யன்ன ஓணே?
சுனில்: நீங்கள் எங்கே போக வேண்டும்.



සුන්දරම්: මම මරදානට යන්න ඕනේ.
කොයි බසයෙන් ද යන්න ඕනේ.
மம மறதானட யன்ன ஓணே.
கொய் பஸயென்த யன்ன ஓணே?
சுந்தரம்: நான் மருதானைக்குப் போக வேண்டும்.
எந்த பஸ்ஸில் போக வேணும்?

සුනිල්: ආ... මමත් මරදානට යන්නේ.
එකසිය තුන බසයෙන් යන්න පුළුවන්.
ஆ... மமத் மறதானட யன்னே.
எகஸிய துன பஸயென் யன்ன புலுவன்.
சுனில்: ஆ... நானும் மருதானைக்குப் போகிறேன்.
நூற்றி மூன்றாம் இலக்க பஸ்ஸில் போகலாம்.

ආ අර එන්නේ බසය යමු.
ஆ... அர என்னே பஸய யமு.
ஆ.... அதோ பஸ் வருகிறது போவோம்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.**

உதா: ஐயா நேரம் என்ன?
වේලාව කීය ද මහත්මයා?

i. நான் கண்டியில் இருந்து வருகிறேன்.
..............................................................

ii. இப்போது நேரம் இரண்டு மணி.
..............................................................

iii. நான் மருதானைக்குப் போக வேண்டும்.
..............................................................

iv. அதோ பஸ் வருகிறது.
..............................................................






'Is' எனும் துணைவினைச் சொல் (Auxiliary Verb) சகிதம், நிகழ்கால எச்சவினைச் சொல் (Present participle) கையாளப்பட்டு அமைக்கப்பட்ட மேலும் சில வாக்கியங்களை இங்கே பயில்வோம்.

(அ) My brother is drawing.
எனது சகோதரன் வரைந்துகொண்டு இருக்கின்றான்.

(ஆ) My brother is drawing a picture.
எனது சகோதரன் ஒரு படம் வரைந்துகொண்டு இருக்கின்றான்.

(அ) My sister is looking.
எனது சகோதரி பார்த்துக்கொண்டு இருக்கின்றாள்.

(ஆ) My sister is looking at a picture.
எனது சகோதரி ஒரு படத்தைப் பார்த்துக்கொண்டு இருக்கின்றாள்.

(அ) Our dog is running.
எங்களுடைய நாய் ஓடிக்கொண்டு இருக்கின்றது.

(ஆ) Our dog is running into the garden.
எங்களுடைய நாய் தோட்டத்தை உள்நோக்கி ஓடிக்கொண்டு இருக்கின்றது.

(அ) My father is reading.
எனது தந்தை வாசித்துக்கொண்டு இருக்கின்றார்.

(ஆ) My father is reading a newspaper.
எனது தந்தை ஒரு பத்திரிகையை வாசித்துக்கொண்டு இருக்கின்றார்.

(அ) My mother is sewing.
எனது தாய் தைத்துக்கொண்டு இருக்கின்றார்.

(ஆ) My mother is sewing a frock.
எனது தாய் சட்டை ஒன்றைத் தைத்துக்கொண்டு இருக்கின்றார்.

(அ My friend is playing.
எனது நண்பன் விளையாடிக்கொண்டு இருக்கின்றான்.

(ஆ) My friend is playing cricket.
எனது நண்பன் கிரிக்கெட் விளையாடிக்கொண்டு இருக்கின்றான்.

(அ) Your brother is waiting.
உனது சகோதரன் காத்துக்கொண்டு இருக்கின்றான்.

(ஆ) Your brother is waiting for me.
உனது சகோதரன் எனக்காகக் காத்துக்கொண்டு இருக்கின்றான்.

(அ) Your sister is cooking.
உனது சகோதரி சமைத்துக்கொண்டு இருக்கின்றாள்.

(ஆ) Your sister is cooking rice.
உனது சகோதரி சோறு சமைத்துக்கொண்டு இருக்கின்றாள்.

(அ) Your father is writing.
உனது தந்தை எழுதிக்கொண்டு இருக்கின்றார்.

(ஆ) Your father is writing a letter.
உனது தந்தை ஒரு கடிதம் எழுதிக்கொண்டு இருக்கின்றார்.

(அ) Your mother is watching.
உனது தாய் பார்த்துக்கொண்டு இருக்கின்றாள்.

(ஆ) Your mother is watching the television.
உனது தாய் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டு இருக்கின்றாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.



# ஒபாமாவின் பதவியேற்பு வைபவத்திற்கு பெருமளவு நிதி

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் பராக் ஒபாமாவின் பதவியேற்பு வைபவம் எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளமை நாம் அறிந்ததே.

மேற்படி வைபவத்தை வெகு விமரிசையாக நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த வைபவத்தின்போது இரண்டரை மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கலந்து கொள்வர் என்றும் கருதப்படுகின்றது. இவ்வாறு இந்த பதவியேற்பு வைபவம் விமரிசையாக நடத்தப்படவுள்ளதால் 15 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி மேலதிகமாகத் தேவைப்படுவதால் அந்த நிதியினை வழங்குமாறு கோரி அமெரிக்க நாடாளுமன்றத்தில் கோரப்பட்டுள்ளது. அமெரிக்காவில் வழமையாக நடைபெறுகின்ற தேசிய முக்கியத்துவம் மிக்க நிகழ்ச்சிகளுக்கு செலவிடப்படுகின்ற நிதியை விட அதிகளவிலான நிதி இவ்வாறு பராக் ஒபாமாவின் பதவியேற்பு வைபவத்திற்கு செலவிடப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

# எண்ணெய் உற்பத்தியை குறைப்பதற்கு தீர்மானம்

மசகு எண்ணெயின் விலை சரிவை தடுக்குமுகமாக எண்ணெய் உற்பத்தியைக் குறைப்பதற்கு 'ஒபெக்' எனப்படும் பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய நாளாந்தம் 20 லட்சம் பீப்பாய்கள் வீதம் எண்ணெய் உற்பத்தி குறைக்கப்படவுள்ளது. இந்த தகவலை சவுதி அரேபியாவின் எண்ணெய் வள அமைச்சர் அலி நயமி தெரிவித்துள்ளார். மேற்படி தீர்மானத்திற்கு 'ஒபெக்' அமைப்பின் உறுப்பு நாடுகள் அனைத்தும் இணங்கியிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜூலை மாதமளவில் 147 அமெரிக்க டொலராக இருந்த ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் தற்போது 50 டொலராக சரிவைக் கண்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. இது குறித்து எண்ணெய் உற்பத்தி நாடுகள் அச்சமடைந்துள்ளன. எனவே, 'ஒபெக்' அமைப்பைச் சேராத ஏனைய நாடுகளும் எண்ணெய் உற்பத்தியை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.






# கடற்கொள்ளையை தடுப்பதில் சீன கடற்படை தீவிரம்

ஏடன் வளைகுடாப் பகுதியில் அண்மைக் காலமாக கடற்கொள்ளையர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கப்பல் கடத்தல்களை தடுப்பதற்காக சீனா தனது கடற்படைக் கப்பல்களை அப்பகுதிக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது

சீன எண்ணெய் கப்பலொன்றை கடற்கொள்ளையர்கள் கடத்த முயன்ற சம்பவமொன்றையடுத்தே மேற்படி முடிவினை சீன அரசாங்கம் எடுத்துள்ளது. எனினும், குறித்த சம்பவத்தின்போது மலேசிய கடற்படையினர் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாக அந்த கடற்கொள்ளை முறியடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அண்மைக்காலமாக இவ்வாறு பல சம்பவங்கள் நடைபெற்று வருகின்றமையால் ஏனைய நாடுகள் சிலவும் தமது கடற்படையினரை 'ஏடன்' வளைகுடாப் பகுதிக்கு அனுப்பி வருகின்றன.

கப்பல்களைக் கடத்தும் கடற்கொள்ளையர்கள் பெருமளவு பணத்தை பணயமாக கோரி வருகின்றனர். இதனால், இப்பகுதியானது கப்பல் போக்குவரத்தை மேற்கொள்வதற்கு ஆபத்தான பகுதியாக மாறியுள்ளது.

எனவே, இப்பகுதியில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஐ.நா சபை தனது அங்கத்துவ நாடுகளுக்கு அனுமதி வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 184

**கேள்வி:** பெற்றோலிய ஏற்றமதி நாடுகளின் அமைப்பு எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

**சரியான விடை.........................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 184,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 182 இன் சரியான விடை: 5 வருட காலம்**

**பரிசு பெறுவோர்**

எம்.நஃப்லி கான்,
37, கஹப்பிட்டிய வீதி, மிரிஸ்வத்த, பலாங்கொடை.

ஆர்.நோபல்,
எலிஜின் தோட்டம், லிந்துல.

ஆர்.சாரங்கன்,
28 2/2, மாதன்கஹவத்தை, வெள்ளவத்தை, கொழும்-06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலின் நன்மை, தீமைகள்



பால் மிகவும் போஷாக்குள்ள உணவு வகைகளில் ஒன்று. சிறியோர் முதல் பெரியோர் வரை சகலரும் பாலைப் பருகுகின்றனர். மனிதன் பிறந்தவுடன் முதலாவதாக அவனது ஆகாரமாகத் திகழ்வது பாலே. எனவே, பிறந்தது முதல் தொடர்ச்சியாக உட்கொள்ளும் பானமாக பாலைக் கருதலாம்.

ஆரம்பத்தில் தாய்ப்பாலை மாத்திரம் அருந்தும் மனிதன், நாளடைவில் பல்வேறு காரணங்களால் படிப்படியாக உணவுடன் வேறுவகையான பால் வகைகளையும் உட்கொள்ளப் பழகிக் கொள்கிறான். இவ்வாறு உணவாக அருந்தும் பால் வகைகள் நமது உடலுக்கு போஷாக்கினைப் பெற்றுத்தரும் அதேவேளை, சிலவேளைகளில் நமது உடலுக்குப் பாதிப்பினையும் ஏற்படுத்தவல்லது.



## தாய்ப்பால்

மனிதன் பிறந்தவுடன் முதல் உணவாகச் சேர்த்துக்கொள்ளப்படும் மிகப் பெறுமதியான உணவு தாய்ப்பால் ஆகும். இயற்கை வழங்கிய அரிய கொடைகளில் ஒன்றாகிய தாய்ப்பாலானது மிக உயர்ந்த பால் வகைளில் ஒன்றென்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஒரு குழந்தை தாய்ப்பாலைக் குடிப்பதால் அதன் போஷாக்கும் வளர்ச்சியும் மிகச் சிறந்த முறையில் இருக்கும். அத்துடன்,நோய்களின் தாக்கம் இல்லாத வகையில் சிறந்த நோய் எதிர்ப்புச் சக்தியை அள்ளி வழங்குவதும் தாய்ப்பாலே.

இத்தகைய உயர் குணாம்சங்களைக் கொண்டதாக தாய்ப்பால் இருந்தாலும் சிலவேளைகளில், நோய்களுக்கும் உடல் பாதிப்புக்களுக்கும் இந்தப் பாலே காரணமாக அமைந்துவிடுகின்றது. அஜீரணம், வயிற்றோட்டம், உடல் வேதனை, வயிற்றுளைவு போன்றவை அவற்றில் சிலவாகும். தாய்ப்பாலைக் கொடுக்கும் தாய்



ஏதேனும் ஒவ்வாத உணவு வகைகளை உட்கொள்ளும்போதே இந்த நிலைமை ஏற்படுகின்றது.

## பசும்பால்

மிகவும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு பால் வகை பசும் பாலேயாகும். பசும்பால் உலர்த்தப்பட்டு பால்மாவாக பாரிய அளவில் வர்த்தகச் சந்தையில் உலா வருகின்றது. குழந்தைகளுக்குத் தாய்ப்பால் அருந்தும் வாய்ப்பு இல்லாவிட்டால் அதற்குப் பதிலாக அருந்தக்கூடிய மிகச் சிறந்த பால்வகை பசும்பாலாகும். அதேபோல், வளர்ந்தோருக்கும் முதியோருக்கும் வழங்கக்கூடிய மிகச் சிறந்த சத்துணவு பசும்பாலாகும். பசும்பாலில் புரதம், கொழுப்பு மற்றும் விற்றமின்கள் அடங்கியுள்ளன.

பசும்பால் மிகவும் குளிர்ச்சியான ஒரு பானம் என்பதால் அதனை உணவாக எடுக்கும் பொழுது மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். பீனிசம், சளி, தடிமன், இருமல் போன்ற நோய்கள் ஏற்படுவதற்கு பசும்பால் சிலவேளைகளில் காரணமாக அமைந்து விடுவதுண்டு. இத்தகைய நோய் உள்ளவர்களுக்கும் உணவு சமிபாடடையாத தன்மையுள்ளவர்களுக்கும் பசும்பால் பாதிப்பினை ஏற்படுத்தும். எனவே, இது குறித்து அவதானமாக இருப்பது அவசியமாகிறது.



## எருமைப்பால்

எருமைப்பாலும் மிகுந்த மருத்துவ குணமுடையது. அதிகமாக இதனை உறைய வைத்து உணவாகப் பயன்படுத்துகின்றனர். எனவே, உறைய வைத்து தயிராகப் பயன்படுத்தப்படும் எருமைப் பாலில் உடல் சக்திக்கும் உடல் பருமனுக்குரியதுமான சத்துக்கள் பெருமளவில் காணப்படுகின்றன. இதனால், மெலிந்த உடலமைப்பைக் கொண்டவர்களுக்கும் உணவின் சுவையை அறியும் வாய்ப்புக் குறைந்தவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஒரு பானமாகும். உறைய வைத்து தயிராக மாற்றப்பட்ட எருமைப்பால் சமிபாட்டுக் குறைபாடுள்ளவர்களுக்கு ஏற்ற மிகச் சிறந்த பானமுமாகும்.

## ஆட்டுப்பால்

ஒப்பீட்டளவில் ஆட்டுப் பாலைக் குறைந்தளவே பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும் இது மிகவும் போஷாக்குக் குணமுடைய பால் வகைகளில் ஒன்றாக கருதப்படுகின்றது. இதில் புரதம், கொழுப்பு, விற்றமின்கள் அதிகம் அடங்கி உள்ளன.

இது அதிகம் உஷ்ணமானதொரு பானமும் கூட. வாதம், எரிவு போன்ற நோயுள்ளவர்களுக்கும் சொறி, சிரங்கு உள்ளிட்ட பலவகையான தோல் நோய்களைக் கொண்டவர்களுக்கும் ஆட்டுப்பால் பாதிப்பினை ஏற்படுத்தும்.

-இரஞ்சித் ஜெயகர்

# டைனோசர் பற்றிய ஆய்வு

'டைனோசர்' என்பது உலகின் மிகப் பழைமையான உயிரினங்களில் ஒன்று என்பது அனைவரும் அறிந்த விடயம். மீண்டும் 'டைனோசர்' இனம் பற்றிய ஆராய்ச்சியில் ஓர் உத்வேகம் ஏற்பட்டிருக்கிறது. பல்வேறு நாடுகளில் டைனோசர்



இனத்தின் முட்டைகள், எலும்புக்கூடுகள் என லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் மண்ணில் புதைந்திருந்த படிமங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில், அமெரிக்காவின் வடக்கு டகோடா பகுதியில் சுமார் ஆறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த 'ஹட்ரோசர்' என்ற இன டைனோசரின் முழுமையான உடல் கிடைத்திருக்கின்றது. இது விஞ்ஞானிகளையும் இத்துறையில் ஈடுபாடுள்ள ஆர்வலர்களையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளது.

## டகோடா

எகிப்திய பிரமிட்டுகளில் அந்நாட்டை ஆண்ட மன்னர்களின் உடலை தைலங்கள் மூலம் பதப்படுத்தி மம்மியாக வைத்துப் பாதுகாத்தனர். அதேபோல, இந்த டைனோசரின் உடலும் கெட்டுப் போகாமல் பத்திரமாக அப்படியே கிடைத்திருக்கின்றது. பாறை-மண்ணுக்கு இடையில் வெளிக் காற்றுப் புகாமல் புதைந்து அப்படியே படிமமாக மாறியதால் அது இன்னமும் கெட்டுப் போகாமல் பாதுகாப்பாக இருக்கின்றது.தேசிய புவியியல் சமூகம் (National Geographic Society) எனும் அமைப்பைச் சேர்ந்த விஞ்ஞானிகள், இதற்கு'டகோடா' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இந்த டைனோசர் உயிருடன் இருந்தால் எப்படி இருக்கும் என்பதை கற்பனைப் படமாகவும் வெளியிட்டுள்ளனர்.

டைனோசர் இனத்தின் உடல் இயக்கங்கள் பற்றி ஆராய இந்தக் கண்டு பிடிப்பு பெரிதும் உதவும் என்பது விஞ்ஞானிகளின் நம்பிக்கையாகும்.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடமாடும் குட்டிப்பிசாசுகள்



**திரையரங்கு கென்டீனுக்கு அருகில் இருளில் யாரோ சிலர் பேசிக்கொள்ளும் சத்தம் கேட்பது பற்றி விமல் காவல்காரரிடம் மெதுவாக எடுத்து உரைத்ததும்...?**

காவல்காரர் தனக்குப் பேய் ஏறுகிறது என்று கூறியதைக் கேட்டதும் விமலுக்கு நடுக்கமாக இருந்தது. இவர் என்ன சொல்கிறார். இவருக்குப் பேய் ஏறுகிறதா? என்று யோசித்தவன் காவல்காரரின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தான். அவர் கேட்கக் கேட்க அவன் பதில் சொல்லாமல் இருப்பதைப் பார்க்கையிலேயே அவருக்குக் கோபம் கோபமாக வந்தது.

''என்ன தம்பி, நான் கேட்பது உங்களுக்குப் புரியவில்லையா? பேயை எங்கு பார்த்தீர்கள்? சொல்லப் போகிறீர்களா இல்லையா?'' என்று சிறிது கடுமையாகக் கேட்டார்.

இனியும் இவரிடம் சொல்லாமல் இருக்க முடியாது. இவருக்குக் கோபம் வருவதைப் பார்த்தால் இவர் பேயாகவே மாறிவிடுவார் போல அல்லவா இருக்கிறது, என்று நினைத்தவன் மெதுவாகக் கேட்டான்.

''வந்து ஐயா! உங்களுக்குப் பேய் ஏறுவதாகக் கூறுகிறீர்களே! ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்?'' என்று அழுவது போல் கேட்டான்.

அவன் இப்படிக் கேட்டதும் அவர் தன்னையும் அறியாமல் குபீர் என்று சிரித்துவிட்டார். பின்னர் ''நான் கேட்கக் கேட்க நீங்கள் பதில் சொல்லாமல் இருந்ததால் எனக்குக் கோபம் வருகிறது என்பதைத் தான் அப்படி பேய் ஏறுகிறது என்று கூறினேன். எங்கள் ஊரில் எனக்குக் கோபம் ஏற்படுத்தாதே என்பதை எனக்குப் பேய் ஏற்றாதே என்பார்கள். நானும் அப்படித்தான் சொன்னேன்'' என்று கூறி மீண்டும் சிரித்தார்.

அவர் கூறியதைக் கேட்டதும் விமலுக்கு ஓரளவுக்கு தைரியம் ஏற்படுவது போல் இருந்தது.

அவர் மீண்டும் தொடர்ந்தார். ''தம்பி, எனக்குப் பேய் ஏறுகிறது என்று நான் கூறியதைக் கேட்டு எனக்கு உண்மையிலேயே பேய் ஏறுகிறது என்று நினைத்துப் பயந்து விட்டீர்களா? ம்.... உங்களைப் போன்ற ஒரு பயந்தாங்கொள்ளியை நான் பார்த்ததே இல்லை'' என்று கூறி மீண்டும் சிரித்தார்.

அவர் கூறுவதைக் கேட்கையில் விமலுக்கு மிகுந்த அவமானமாக இருந்தது. அதனால் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தான். காவல்காரர் மீண்டும் தொடர்ந்தார்.

''சரி தம்பி.. இப்பொழுதாவது சொல்லுங்கள். பேயை எங்கு பார்த்தீர்கள்''

''பொறுங்கள்.. சொல்கிறேன்'' என்று கூறியவன் அவரிடம் முதலில் எதைப் பற்றிச் சொல்வது என்று யோசித்தான்.

அந்தப் பெண்ணோடு அவர் நின்று கொண்டு இருந்ததை




அவன் கண்டு விட்டதால் அதுபற்றி இப்பொழுதே கேட்டு விடக்கூடாது. பாழடைந்த அந்த வீட்டுப் பக்கமும் அவர் நின்று கொண்டு இருந்ததைக் கண்டதால் அது பற்றியும் இப்பொழுதே கேட்டு விடக்கூடாது''

அப்படியானால் தியேட்டருக்குள் கென்டீனுக்கு அருகில் யாரோ சிலர் பேசிக்கொள்ளும் பேச்சுக்குரல் கேட்டதே அதுபற்றிச் சொன்னால் என்று நினைத்தவன் சொல்லியே விட்டான்.

''வந்து ஐயா தியேட்டருக்குள் கென்டீனுக்கு அருகில் இருளில் யாரோ சிலர் பேசிக் கொள்ளும் பேச்சுக்குரல் அடிக்கடி கேட்கிறது. லைட்டைப் போட்டுப் பார்த்தால் யாரும் இல்லை. அதுதான் என்னவென்று எனக்குப் புரியவில்லை'' என்று கூறினான்.

''ஓஹோ! இதுதான் உங்கள் பிரச்சினையா? அது பிசாசுக் கோளாறுதான். அதாவது அங்கு குட்டிப் பிசாசுகள் இருக்கின்றன. இந்தக் குட்டிப்பிசாசுகள் இருளில் பேசிக் கொள்கின்றன'' என்று முகத்தில் சிரிப்பே இல்லாமல் கூறினார்.

''என்ன குட்டிப் பிசாசுகளா?'' என்று அதிர்ச்சியுடன் கேட்டவனிடம் ''ஆமாம், குட்டிப் பிசாசுகள்தான் அவற்றை நீங்கள் பார்க்க வேண்டுமா? வாருங்கள் என்னோடு'' என்று அவனை அழைத்தார்.

விமலுக்கு எதுவும் புரியவில்லை. என்ன செய்வதென்று யோசித்தபடி பரிதாபமாக அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

(தொடரும்....)

# முழுப் பூசணிக்காயை சோற்றில்....

ஓர் ஊரில் சந்துரு என்னும் பணக்காரன் ஒருவன் இருந்தான். அவனிடம் ஏராளமான சொத்துக்கள் இருந்தன. எல்லா வாழ்க்கை வசதிகளும் அவனுக்கு இருந்தன. ஆனாலும், அவனிடம் ஒரு கெட்ட குணம் இருந்தது. ஏதாவது ஒரு பொருளைப் பார்த்தால் அதை தான் அடைந்து விட வேண்டும் என்பதுதான் அது.

ஒருநாள் தன் காடு கழனிகளைக் காணச் சென்று கொண்டிருந்தான் அவன். பயிர் பச்சைகள் செழிப்பாக வளர்ந்திருப்பதை பார்த்ததும் கடவுளுக்கு நன்றி சொல்லிக் கொண்டு அவன் வீடு திரும்பலானான். அப்பொழுது ராமு என்பவனின் தோட்டத்து வேலி ஓரம் அதிகமான பூசணிக்காய்கள் காய்த்திருப்பதைப் பார்த்தான். தான் ஒரு பூசணிக்காயை எடுத்துச் சென்றால் என்ன என்று எண்ணினான். பூசணிக்காயில் பொரியல், கூட்டு எல்லாம் செய்யலாம். சுவையாக இருக்கும் என நினைத்தான்.



நன்கு முற்றிய ஒரு பூசணிக்காயைப் பறித்தான் சந்துரு. அது சற்றுக் கனமாக இருந்தது. அதைத் தோளின் மீது தூக்கி வைத்துக் கொண்டு விடுவிடுவென வீட்டை நோக்கி நடந்தான். அதை ராமு பார்த்துவிட்டான். பணக்காரன் ஒருவன் திருடுகிறானே. எவ்வளவு பாடுபட்டு வளர்த்த பூசணிக்காய் அது. அக்கம் பக்கத்தாரிடம் எல்லாம் பணக்காரனான சந்துரு, தன் தோட்டத்திலிருந்து ஒரு பூசணிக்காயை திருடிக்கொண்டு போய் விட்டானென்றும் அவனை விசாரித்து பூசணிக்காயை தனக்கு மீட்டுத்தர வேண்டும் என்றும் அவர்களை ராமு கேட்டுக் கொண்டான். இதனால் ராமுவுடன் அயலவர்கள் சந்துரு வீட்டிற்குச் செல்வது எனத் தீர்மானித்தனர்.

அவர்கள் வரப்போகிற செய்தி சந்துருவுக்கு முன்னரே எட்டியதால் ஊர்க்காரர்கள் வந்து தன்னை விசாரித்து தன் திருட்டு வெளிப்பட்டு விட்டால் என்ன செய்வது? திருட்டுப்பட்டம் கொடுத்து விடுவார்களே. ''அதோ பூசணிக்காய் திருடன் போகிறான்! என்று சொல்லிச் சிரிப்பார்களே?'' ஊர்க்காரர்களை எப்படி வசியப்படுத்துவது? சந்துரு யோசித்து அதற்கு ஒரு வழி கண்டுபிடித்தான் சமையல்காரனை அழைத்து ஆட்டுக்கறி, கோழிக்குருமா, ரசம், பொரியல், பாயாசம் எல்லாம் உடனே தயாரிக்கச் சொன்னான். பெரிய பெரிய வாழை இலைகளை அறுக்கச் சொன்னான். எல்லாம் 'மடமட'வெனத் தயாராகிவிட்டன.

ஊர்க்காரர்கள் ராமுவுடன் வந்தனர். அவர்கள் விசாரணையை தொடங்குவதற்கு முன், ''வாங்க! வாங்க! நீங்க எல்லாம் ஒண்ணு சேர்ந்து என் வீட்டுக்கு வந்திருப்பது என் பாக்கியம். உங்களை எல்லாம் என் வீட்டில் ஒரு நாள் சாப்பாடு கொடுக்க அழைக்க வேண்டுமென்று வெகுநாட்களாக எண்ணிக் கொண்டிருந்தேன். இன்று விருந்தும் தயாராகிவிட்டது. முதலில் நீங்கள் எல்லோரும் சாப்பிடுங்கள்'' என்று சொல்லி எல்லோரையும் சாப்பிட உட்கார வைத்துவிட்டான். சமையல்காரரும் வேலைக்காரர்களும் ஒன்றின்மேல் ஒன்றாக உணவு வகைகளைக் கொண்டு வந்து பரிமாறி இவர்களைப் பேச முடியாமல் திக்குமுக்காடச் செய்துவிட்டனர். இவ்வளவு வகையான உணவுப் பொருட்களை சாப்பிடாத அவர்கள் மூக்குப்பிடிக்கச் சாப்பிட்டனர். அப்பொழுது அவர்களுக்கு இவ்வளவு செலவழித்துப் பிரமாதமான சமையல் செய்து இவ்வளவு பேருக்கு சாப்பாடு போடுகிற தயாளமனம் படைத்த சந்துரு நாலு காசு கூடப் பெறாத பூசணிக்காயை திருடிவிட்டதாக ராமு சொல்கிறானே, அவன் பேச்சை நம்பிக் கொண்டு நாம் விசாரித்துக் கெட்ட பெயர் வாங்கிக் கொள்ளக்கூடாது என்று எண்ணினார்கள் ஊரார். அதனால், பணக்காரனை விசாரிக்காமலேயே சாப்பிட்ட சந்தோஷத்தில் போய்விட்டனர்.

அவர்களுக்கு சோற்றைப் போட்டு பூசணிக்காய் திருட்டை எப்படி சந்துரு மறைத்தார். பார்த்தீர்களா? அன்றிலிருந்துதான் முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்த மாதிரி என்ற பழமொழி உருவானதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிகள் பல வகைப்படும். அவற்றுள் மோட்டார் வாகன ஓட்டப்போட்டியும் உலகப் புகழ் பெற்றது. ஆயினும், மோட்டார் வாகன ஓட்டப்போட்டிகள் எனும்போது அநேகமான மோட்டார் வாகனப் போட்டிகளை வீதிகளில் நாம் கண்டிருப்போம். ஆனால், 'ஃபொமியுலா' பிரிவின் மோட்டார் வாகன ஓட்டப்போட்டிகளை நாம் விதிகளில் காணமுடியாது. அதனால், இந்த 'ஃபொமியுலா' ரக மோட்டார் வாகன ஓட்டப்போட்டிகள் சற்று வித்தியாசமானவையே, அவை பற்றிய சில விபரங்களைப் பார்ப்போம்.



# உலகப் புகழ் 'ஃபொமியுலா' மோட்டார் வாகனப் போட்டிகள்






## ஒரேயொரு ஆசனம்

இந்த மோட்டார் வாகனமானது இந்த வகைப் போட்டிகளுக்காகவே தயாரிக்கப்பட்டவையாகும். இந்த வாகனத்தில் ஒரேயொரு ஆசனம் மட்டுமே காணப்படும். வாகனத்தை செலுத்தும் போட்டியாளருக்குரிய ஆசனமே அது. இந்த வாகனத்தை ஒருவகை சிறப்புத் தன்மையுடன் தயாரித்துள்ளனர். அதாவது, வாகனத்திற்கு எதிர் திசையிலிருந்து வீசுகின்ற கடுமையான காற்றானது வாகனத்தின் அடிப்பகுதியால் அல்லது மேல் பகுதியால் கடந்து செல்லும் வகையில் இந்த வாகனம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஏனெனில், எதிர்திசைக் காற்றானது எந்தவொரு அழுத்தத்தையும் ஏற்படுத்தி ஓட்ட வேகத்திற்குத் தடையாக இருந்து விடக்கூடாது என்பதற்காகவே அவ்வாறு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, இந்த வாகனத்தின் பதிவான தன்மையும் வெளிப்புறத் தோற்றமும் வாகனமானது கடும் காற்றின்போது நிலத்தோடு ஒன்றிய வகையில் செல்லத்தக்கதாகவே அமைக்கப்பட்டுள்ளது. தற்கால 'ஃபொமியுலா' பிரிவு மோட்டார் வாகனப் போட்டியானது 1950 ஆம் ஆண்டில்தான் முதன்முதலாக நடத்தப்பட்டது. இருப்பினும், இதற்கு முன்னரும் மோட்டார் வாகன ஓட்டப்போட்டிகள் நடைபெற்றே வந்துள்ளன. 1890 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியை பின்னோக்கினால், உலகிலேயே முதலாவது 'கோன்ஃபரி' போட்டிகள் 1901 ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் நடைபெற்றுள்ளதை அறியலாம். இந்தப் போட்டிகளை 'Grand prix' என்ற பெயரில் அப்போது அழைத்துள்ளனர்.

## பல சுற்றுக்கள்

'கோன்ஃபரி' போட்டிகளானது பல சுற்றுக்களைக் கொண்ட போட்டியாகும். ஒவ்வொரு சுற்றிலும் பெறப்படுகின்ற புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டே வருடாந்த வெற்றியாளர் அறிவிக்கப்படுவர். இந்தப் போட்டிகளின் உச்சக்கட்டப் போட்டியாகக் கருதப்படுவதுதான் 'ஃபொமியுலா-1' போட்டியாகும். இந்தப் போட்டிகளுக்கான வருடாந்த கால அட்டவணையும் காணப்படுவதுடன், பாரிய அளவில் ஊடக அனுசரணையும் வழங்கப்படுகின்றது. எனினும், 'ஃபொமியுலா-1' போட்டிகள் போன்று வேகத்தைக் கொண்டிராத போதிலும் அதே வடிவில், அதே அமைப்பு முறையில் நடைபெறுகின்ற 'ஃபொமியுலா-2','ஃபொமியுலா-3' போட்டிகளும் நடைபெறுவதுண்டு. இலங்கையில் நடைபெறுகின்ற போட்டிகளில் 'ஃபொமியுலா 3' ரகப் போட்டிகளே நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தயாரிப்பாளர்களுக்கும் பரிசு

உலகில் முதன்முதலாக நடைபெற்ற 'ஃபொமியுலா' ரகப் போட்டியில் வெற்றியீட்டியவர் குஸெப் ஃபொரினா என்பவராவார். பிற்காலத்தில் பிரிட்டன் நாட்டவர்கள் இந்தப் போட்டிகளில் சிறப்பாக திறமைகளைக் காட்டியமையால் 1960 ஆம் ஆண்டுகளிலும் 1970 ஆம் ஆண்டுகளிலும் 12 தடவைகள் உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டிருந்தனர். 'பொமியுலா' பிரிவுப் போட்டிகள் கூடிய வரவேற்பைப் பெற்று வந்தமையால் இவ்வகை மோட்டார் வாகனத் தயாரிப்பாளர்களின் தரமும் அதிகரிக்கத் தொடங்கியது. இதன்படி, தமது உயிரைப் பணயம் வைத்து




இவ்வகைப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டுகின்ற வீரருக்கு மட்டுமன்றி அவருக்கு தொழில்நுட்ப உதவிகளைப் புரிந்த குழுவிற்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும் வெற்றி பெற்ற போட்டியாளர் ஓட்டிச்சென்ற வாகனத்தை தயாரித்த நிறுவனத்திற்கும் பரிசு வழங்கப்படுகின்றது. இதன்படி போட்டியாளர் மட்டுமன்றி அவருக்கு உதவி ஒத்தாசையாக இருக்கின்ற தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் குறித்த வாகனத்தைத் தயாரித்த நிறுவனம் ஆகியோர் அனைவருமே இந்தப் போட்டிகளில் கூடிய ஆர்வத்தை செலுத்துகின்றனர். வாகனத் தயாரிப்பாளர்களுக்கு விருது கிடைப்பதனால் அதன் மூலம் அவர்கள் தமது வர்த்தகத்தையும் அதிகரித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பையும் பெறுகின்றனர். இந்த வகைப் போட்டிகளின் போது ஏற்படும் விபத்துக்கள் மிகவும் பயங்கரமானவை. சிலவேளைகளில் மரணம் கூட சம்பவிப்பதுண்டு. உலகில் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்த 'ஃபொமியுலா' போட்டி வெற்றி வீரரான பிரேஸிலைச் சேர்ந்த 'அயர்ட்டன் சென்னா' என்பவர் இத்தகைய போட்டியின்போது மரணமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொழில்நுட்ப வளர்ச்சியை அடுத்து வாகன உற்பத்தியாளர்கள் நவீன உதிரிப்பாகங்களைக் கொண்டு வாகனங்களைத் தயாரிக்கத் தொடங்கியதால் அது புதியதோர் சர்ச்சையைக் கிளப்பியது. அதாவது, வாகன ஓட்டுனர்களுக்கிடையேயான போட்டியாக இல்லாமல் வாகனங்களின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கிடையிலான போட்டியாக அது மாறியதால் போட்டி ஏற்பாட்டாளர்கள், புதுவகை இயந்திரங்கள் சேர்க்கப்படுவதை மட்டுப்படுத்தினர்.

## தொழில்நுட்ப சேர்ப்பு மட்டுப்படுத்தல்

எனவே, 1977 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட 'டேர்போ' ரக என்ஜின்கள் 1989 ஆம் ஆண்டில் தடைசெய்யப்பட்டது. அவ்வாறே, கணினிமயப்படுத்தப்பட்ட அம்சங்களைக் கொண்ட மோட்டார் வாகனங்களும் 1993 ஆம் ஆண்டில் தடை செய்யப்பட்டது. எப்படியிருப்பினும் போட்டியாளர் ஒருவர் போட்டியை முன்னிட்டு சுமார் 160,000 கிலோமீற்றர் தூரம் வரையில் பயிற்சிக்காகப் பயணம் செய்வார். அவருடன் தொழில்நுட்பவியலாளர்களும் பயணம் செய்வதுடன் பொதுவாகப் போட்டியாளர் ஒருவர் இந்த வகைப் பயிற்சிகளின்போது மேலதிகமாக இரண்டு அல்லது மூன்று வாகனங்களையும் கொண்டு செல்வதுடன் வாகனம் திருத்தும் உபகரணங்களையும் கூடவே கொண்டு செல்வார்.

(மேலும் சில விபரங்கள் அடுத்த இதழில்....)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காடுகளினூடாக பயணம் செய்யும்போது....

**காடுகளினூடாகப் பயணங்களை மேற்கொள்வதற்கு நாம் அதிகம் விரும்புவதில்லை. எனினும், சிலவேளைகளில் எமக்குப் பயணிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். அப்போது நாம் ஒரு சூழல் விரும்பியாகவோ, சூழல் பாதுகாப்பாளராகவோ இருக்கலாம். அல்லது குறிப்பிட்ட இலக்கினை நோக்கிப் பயணித்தல், பாதை தவறிவிடல் அல்லது பறவைகள் கண்காணிப்பு, மருத்துவக்குணம் மிக்க தாவரங்களைப் பார்வையிடல், தேடிச் செல்லல் மற்றும் பாதச்சுவடுகள் கண்காணிப்பு போன்ற ஏதாவது ஒரு நோக்கத்தின் காரணமாக நாம் பயணிக்க நேரலாம்.**

## காடுகளினூடாக பாதைகள்

காடுகளில் தார் வீதிகள் கிடையாது. வளைந்து செல்லும் அடர்ந்த புற்தரைகளுடனான பாதைகள், சதுப்பு நிலங்களுடனான் பாதைகள், மண் பாதைகளையே நீங்கள் காணலாம்.

அவ்வாறான பாதைகளில் பயணிக்கும்போது இவற்றைக் கருத்தில் கொள்ளுங்கள்

✸ மிதிபட்ட காய்கள் அல்லது பழங்கள் இருப்பின் அப்பகுதியில் ஏதாவதொரு விலங்கினம் உணவு உட்கொண்டுள்ளது என்ற முடிவுக்கு வரலாம்.

✸ கிளைகள் வளைந்திருக்கும் பகுதிகள் விலங்குகள் பயணித்திருப்பதைக் காட்டும்.

விசாலமான பகுதிகளில் தாவரங்கள் மற்றும் கிளைகள் உடைந்திருப்பின் பெரிய உருவங்களையுடைய விலங்கினங்கள் அப்பகுதியூடாக கூட்டமாகச் சென்றிருக்கும் என்று அனுமானிக்க முடியும்.

✸ குறித்த இடத்தில் விலங்கின் மலம் இருப்பின் சிறிய குச்சி ஒன்றினை எடுத்து மலத்தினை சோதனையிடுங்கள். மலத்தில் சிறகுகள், எலும்புத்துண்டுகள், விதைகள், ரோமங்கள், புற்கள் என்பன இருப்பின் அவற்றை ஆராய்ந்து குறித்த விலங்கினம் மாமிச உண்ணியா? தாவர உண்ணியா? என்பதனைத் தீர்மானியுங்கள்.

✸ நடந்து செல்லும்போது நக அடையாளங்கள் பதிக்கப்பட்ட மரங்களை நீங்கள் கண்டால் அவதானமாக இருக்கவேண்டும். அந்த நக அடையாளங்கள் கரடிகள் மற்றும் சிறுத்தைகளினதாக இருக்கக்கூடும்.

## விலங்குகள் நடக்கும் நான்கு முறைகள்

காடுகளில் இருக்கும் விலங்குகள் நான்கு முறைகளை பின்பற்றி நடப்பதாக பிரபல பாதச்சுவடு கண்காணிப்பாளரான லின் லெவின் கூறுகின்றார். முயல் குதித்து ஓடும். அந்த நடையை ஹொப்பர் (Hopper) என்று கூறுவர். பூனைகளும் நாய்களும் நடக்கும் முறையை சிந்தித்துப் பாருங்கள். அந்த நடையை ட்ரொட்டர் (Trotter) என்று குறிப்பிடுவர். கரடி மிகவும் வித்தியாசமாக நடக்கும் தன்மை கொண்டது. அந்த நடையை வொட்லர் (Waddler) என்று கூறுவர். இந்த மூன்று முறைகளை விட வேறுபட்ட முறையில் 'விஸ்ல்'பிக் நடக்கும். விஸ்ல்பிக் ஒரு தடவையில் நீண்ட பாய்ச்சலை மேற்கொள்ளும். இந்த நடையை பௌண்டர் (Bounder) என்று கூறுவர். காடுகளிலுள்ள விலங்குகள் நடக்கும் இந் நான்கு முறைகளை நன்கு கவனித்து வைத்திருப்பதானது எமக்கு சிறந்த பயனைப் பெற்றுத்தரும் எனவும் அத்துடன், சிறந்த பாதச் சுவடு கண்காணிப்பாளராகுவதற்கு அது உதவும் என்றும் லின் லெவின் குறிப்பிடுகின்றார்.

## காட்டில் ஆய்வுகளுக்காகச் செல்வீர்களாயின்...

✸ ஆகக் குறைந்தது ஒருவரையாவது பயணங்களில் இணைத்துக் கொள்ளுங்கள். அத்துடன், ஒருவருக்கொருவர் ஆகக் குறைந்தது 5 அடி இடைவெளியில் பயணம் செய்வதே நன்று.



✸ தேவையின்றி விலங்குகளுக்கு அருகில் செல்லாதீர்கள். மான்கள், எருமைகள், மரைகள் அப்பாவி விலங்குகளாகத் தோன்றினாலும் அவற்றினால் ஆபத்துகள் ஏற்படக்கூடும்.

✸ கேட்கும் ஒவ்வொரு சத்தம் குறித்தும் உணரும் வாசனை குறித்தும் மிக அவதானமாக இருங்கள். நீங்கள் பயணிக்கின்றீர்கள் என்பதனையும் உங்கள் குரல் மற்றும் வாசனை என்பனவற்றினை மோப்பம் பிடித்து கரடிகள், காட்டுப்பன்றிகள் உங்களைப் பின்பற்றி வரக்கூடும் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

✸ விலங்குகள் கூட்டமாக ஓரிடத்தில் தரித்திருக்கும்போது அவற்றின் நடுவே ஒருபோதும் பயணம் செய்ய முயற்சிக்காதீர்கள்.

✸ காட்டு விலங்குகளுக்கு உணவு வழங்கவோ, வழங்குவது போன்று அவற்றை ஏமாற்றவோ ஒருபோதும் முயற்சிக்காதீர்கள்.

✸ பயணம் செய்யும் திசை குறித்து கவனத்தில் கொள்ளுங்கள். பயணத்தின்போது திசைகாட்டியை உங்களுடன் வைத்திருங்கள்.

✸ இலக்கினை நோக்கிப் பயணிக்கும் நீங்கள் அபூர்வ விலங்குகளையும் மனதைக் கவரும் அழகிய காட்சிகளையும் காண்பீர்கள். அவற்றைப் புகைப்படம் எடுங்கள்.

✸ விலங்குகளையும் அவற்றின் நடவடிக்கைகளையும் அவதானிக்கும்போது புற்தரைகளில் படுத்திருந்து அல்லது சற்று மறைவான இடங்களில் அல்லது மேடான இடங்களில் மறைந்திருந்து விலங்குகளை அவதானியுங்கள்.

✸ உணவு உட்கொண்ட விலங்குகள் பகல் பொழுதில் நன்றாக ஓய்வெடுக்கும். அதனால் குறித்த விலங்குகளின் நடவடிக்கைகளை அவதானிக்க விரும்பின் காலையும் மாலையும் அவற்றைக் கண்காணிக்க வேண்டும்.

✸ மனிதனின் அல்லது விலங்கின் புதிய பாதச் சுவடுகளை கண்டவுடன் அதனைத் தொடர்ந்து அதற்கு அருகாமையில் நடப்பதைத் தவிருங்கள். ஏனெனில் , உங்களுக்கு முன்னால் நடந்து செல்லும் விலங்கு தன்னைப் பின்தொடர்ந்து எதுவும் வருகின்றதா என அடிக்கடி பின்னால் திரும்பிப் பார்க்கும். அதனால், பாதச் சுவட்டினைப் பின்பற்றும் நீங்கள் கவனமாகப் பயணிக்க வேண்டும்.

✸ உங்கள் கவனமின்மையால் ஏதாவதொரு விலங்கினத்திற்கு நீங்கள் கண்காணித்துக் கொண்டிருப்பது தெரிய வந்தால் அசையாமல் கல்லைப் போன்று இருங்கள். விலங்கு ஒரு தீர்மானத்திற்கு வரும் வரை அசையாதிருங்கள்.

✸ நிலத்தின் மாற்றங்கள் மற்றும் காலநிலை மாற்றங்கள் காரணமாக பாதச் சுவடுகளில் வேறுபாடுகள் ஏற்படும். வறட்சியான காலநிலையில் பாதச் சுவடுகள் விரைவில் மறைந்து விடும். ஈரலிப்பான களிமண், மணல் கலந்த கலப்பு மண், பனி விழுந்த பகுதி, ஆற்றங்கரையில் உள்ள பாதச் சுவடுகள் தெளிவாகத் தெரியும். முன்னோக்கிப் பயணிக்கும் நீங்கள் உலர்வான, ஈரலிப்பான காலநிலை பற்றியும் மண்ணின் இயல்பு குறித்தும் அவதானமாக இருக்கவேண்டும்.

✸ காற்று வீசும் திசை பற்றி அறிந்திருங்கள். நீங்கள் ஒரு விலங்கைப் பின்தொடர்ந்து செல்லும்போது நீங்கள் கீழ்க் காற்றில் (Down wind) இருக்கின்றீர்கள். அதனால் எப்போதும் நீங்கள் பின்தொடரும் விலங்கும் நீங்களும் நேருக்கு நேர் சந்திக்கும் மேல்க் காற்று (Up wind) பகுதியில் பயணிப்பதாக இருக்கக்கூடாது. விலங்கினை நீங்கள் நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்தால், சுற்றி வந்து மீண்டும் கீழ்க் காற்றுக்கு வரவேண்டும். முன்னால் வீசும் காற்று உங்கள் முகத்தினை ஸ்பரிசுக்கும் வரையில் சுழல்வான பயணத்தினை நிறுத்தக்கூடாது. அவ்வாறு செய்யும்போது உங்களை மோப்பம் பிடிக்கும் விலங்கிடமிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ள முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 186 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-197) |
|---|---|---|---|---|
| ச.ஜதிமேனன், தரம் - 4[B], மட்/சிவானந்த தே.பாட., கல்லடி. | பா.ருகையா, தரம் - 6, ஸாஹிரா தே.கல்., கம்பளை. | எம்.இஹ்ராஸ், தரம் - 7[B], மின்ஹாத் தே.பாட., திக்வல்லை. | நியோமி பர்னாந்து, தரம் - 8[B], அன்னம்மாள் ம.ம.வித்., கொழும்பு-13. | முஜாஹித் இலாஹி, தரம் - 8[A], அல்-அமீன் ம.கல்., பன்னல. |

### கணக்குப் புதிர் 4

1.




2. கமல், நிமல், விமல் ஆகியோருக்கு மொத்தம் 300.00 ரூபா கிடைத்தது. நிமலுக்குக் கிடைத்த பணத்தின் இரு மடங்கு கமலுக்குக் கிடைத்தது. விமலுக்கு ரூபா 60.00 கிடைத்தது. இது நிமலுக்குக் கிடைத்த தொகையிலும் ரூபா 20.00 குறைவாகும். மூவருக்கும் கிடைத்த பணத்தொகையை தனித்தனியே காண்க.

* கமல் ..........................................

நிமல் ..........................................

விமல் ..........................................

3.

(அ) ..................., L, ...............

(ஆ) CMXCIX, ..................., ...................

(இ) DXIII, ..................., DXIX




**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.01.07 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 189**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

### அறிவுக்கு விருந்து - 186 விடைகள்

**போட்டி: 01**

(A) 1. மா - 147
ஸ்ட்ரோபரி - 218
அன்னாசி - 174
கொய்யா - 93

2. நான்கு
3. ரூ.46.50 சதம் செலவாகும்.
4. ரூ.2.50 சதம்.

(B) 8 முக்கோணிகள்

**போட்டி: 03**

**இடைவெளியில் வரவேண்டிய சொற்கள் முறையே;**
காணப்படும், வடபகுதியில், 180 கிலோகிராம், 80-100 கிலோகிராம், பழங்களை, தாவரங்களையும், அத்துடன், இவற்றை, கண்ணாடிக் கரடிகள், கண்ணாடி.

**போட்டி: 04**

1. ஹங்கேரி-புடாபெஸ்ட்-ஃபொரின்ட்
2. டென்மார்க்-கொபன்ஹெகன்-டெனிஷ் க்ரோன்
3. ஜோர்தான்-அம்மான்-டினார்
4. ஈரான்-தெஹ்ரான்-ரியால்

### சரியான சொல்லில் கோடிடுக 3

(A)

1. மந்திரக்காரி - which/witch/wich
2. மீள் மதிப்பீடு - revaluation/revelation/revolution
3. வேவு பார்த்தல் - spice/exploration/espionage
4. சமையற்கலை/சமையல் அறை - cuisine/cousin/quinine
5. விட்டுச் செல்/விலகு - quite/quip/quit

(B)

1. உட்சரிப்பு/உச்சரிப்பு/உச்சறிப்பு
2. தளப்பாடம்/ தலவாடம்/தளபாடம்
3. பாரம்பரியம்/பாரபரியம்/பாரம்பறியம்
4. இலச்னை/இலட்சினை/இலச்சினை
5. கடைபிடித்தல்/கடைப்பிடித்தல்/கடைப்பிடிதல்

### ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக 2



### 1


**வழியில் எதிர்ப்படும் நண்பர்களை சந்தித்தவாறு உரிய இடத்தை சென்றடைய வழிகாட்டுங்கள்**




### போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.200 5




**மேலிருந்து கீழ்**

01. ஜோன் லொகி பெயார்ட் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட சாதனம்.
02. வரிசை-ஒத்தகருத்துச் சொல்.
03. இறந்தவர்களை அடக்கம் செய்யும்/தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லும் இடம்.
04. சூரியன் என்றும் அர்த்தப்படும்.
07. உலகில் பாவனையிலுள்ள மொழிகளில் பழைமையான, இனிமையான மொழியாகக் கருதப்படுவது.
08. தைப்பதற்குப் பயன்படும் சாதனமொன்று.

**இடமிருந்து வலம்**

02. மாலை நேரத்தில் பூக்கும் பூ.
05. மொன்ரோவியாவைத் தலைநகராகக் கொண்ட ஆபிரிக்க நாடு.
06. இரும்பைத் தன்வசம் இழுக்கக்கூடியது.
08. உடல்/இறைச்சி என்றும் அர்த்தம் கொள்ளலாம்.
09. சிறிய கொள்கலன்.

**குறுக்கெழுத்துப்போட்டி 197 விடைகள்**

**மேலிருந்து கீழ்**

02. சுகாதாரம்
03. நாளை
05. ஓலை
06. சமநிலை
07. தந்தி (குழம்பி)
09. கமம்
11. சுறா

**இடமிருந்து வலம்**

01. யேசுநாதர்
04. காளை
06. சதா
08. மரகதம்
10. நிம்மதி
12. புறா

**குறுக்கெழுத்துப் போட்டி -200**
**"விஜய்"**
**த.பெ.எண். 2037**
**கொழும்பு**

**பாராட்டுப் பெறுவோர்**

என்.நிருபனா, தரம் - 9, ஹைலண்ட்ஸ் கல்., ஹட்டன்.


பி.மிஃப்ரா, தரம் - 12, அல்-முபாரக் தே.பாட., மள்வானை.

லோ.லிதர்சன், தரம் - 9[D], விபுலானந்தா கல்., பண்டாரிகுளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஓரங்குட்டானுக்கும் மனிதனுக்கும் இடையிலான ஒற்றுமைகள்!

போர்னியா மற்றும் சுமாத்திரா சேற்று நிலப்பகுதிகளில் வசிக்கும் ஒருவகை வானர இனமே ஓரங்குட்டான் (*Orangutan*) எனக் கூறப்படுகின்றது. மலே மொழியில் ஓரங்குட்டான் என கூறப்படுவது 'காட்டு மனிதன்' என்ற அர்த்தத்திலாகும்.

'மமாலிய' இனத்தின் 'பிரிமாட்டேஸ்' குடியின் அனத்திரரோபொய்டா (*Anthropoidea*) குடியின் பொங்கிடெ (*Pongidae*) இனத்தினை சேர்ந்தவையே இந்த விலங்குகளாகும். இவை உணவாகப் பழங்களையும் தாவரங்களையும் உட்கொள்கின்றன. மிகுந்த உடல் பலமும் உறுதியும் கொண்ட இவற்றின் ஆண் குரங்குகள் பெண் குரங்குகளை விட அளவில் பெரிதாகக் காணப்படும்.

ஓரங்குட்டானின் பாதங்களின் விரல்கள் மிக நீண்டிருக்கும். அவற்றின் கால் விரல்களில் வளையம் போன்ற அமைப்புக் காணப்படும். இவை நிலத்தில் மெதுவாகவே நடந்து செல்லும். முகம், கால், கைகளில் உரோமங்கள் காணப்படாது. அதிக வயதான ஆண் குரங்குகளின் கன்னங்கள் தடித்துப் பெரிதாக இருக்கும்.

நீண்ட முன்னங்கால்களினால் இலகுவாக மரத்திற்கு மரம் தாவும் ஆற்றலினைக் கொண்டுள்ள இவை பலம், புத்திக் கூர்மை ஆகிய விடயங்களில் ஏனைய விலங்கினங்களை விட முன்னணியில் திகழ்கின்றன. ரஷ்யாவின் பிட்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானத் துறை பேராசிரியர் ஜெஃப்ரி ஸ்வொட் என்பவர் மனிதனுக்கும் ஓரங்குட்டான் குரங்குக்கும் உள்ள ஒற்றுமைத் தன்மைகளை வெளிப்படுத்தியுள்ளார். மனிதர்களும் ஓரங்குட்டானும் கரு சுமக்கும் காலத்தின் ஒற்றுமைத் தன்மையையும் அவர் சுட்டிக் காட்டுகின்றார். மனிதர்களைபொறுத்தவரையில் பெண்கள் கருவை சுமக்கும் காலம் 270 நாட்களாகும். அவ்வாறேதான் ஓரங்குட்டான் பெண் குரங்குகளும் 270 நாட்கள் கருவினை சுமப்பதாக பேராசிரியர் தனது ஆராய்ச்சிகளின் மூலம் தெரியப்படுத்தியுள்ளார். மானிடவியல் பெண் விஞ்ஞானியான செரில் நொட் என்பவரும் பல ஆண்டுகள் போர்னியோ தீவில் இந்தக் குரங்குகளின் நடத்தையினை கண்காணிக்கும் முகமாக ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். குட்டிகளுடன் வாழும் இவை மரத்தின் கீழே குட்டிகளுக்கு விளையாடுவதற்கு வீடு அமைத்துக் கொ... தாய் குரங்குகள் முயற்சிக்கின்றன. குட்டிகளை ... சுயமாக வாழப் பழக்க ... வாறு செய்கின்றன. மனித... லினைப் போன்றே அதன் ... உணவு கிடைக்காத போது கொழுப்பைச் சேமித்து வைத்... பயன்படுத்தும் வகையில் உருவாக்கம் பெற்றுள்ளது.

ஆக, ஆராய்ச்சிகளின் ... மனிதனுக்கும் ஓரங்குட்டா... இனத்திற்குமிடையே நெரு... மான ஒற்றுமை இருப்பது தெள... வாக அறிய முடிந்துள்ளது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.








இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, டிசம்பர் மாதம் 31ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 31, 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org